சீப்பிரிதி விலை அணா 0—1—6.

R. No. M. 3066. 1935- தம்பர் 1.

PAHUTHARIVU ("REASON")

(திதழ் 7.)

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், கூடைகூக்கள், ஊஞ்சல்கள், உலக விசேஷதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குகிறது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தணிப்பிரதி	0—1—6.	தணிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எங்கமாகச்சில் சேர்ந்தாலும் ஜூலைமாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்

விஷய அட்டவணை. பக்கம்.

பெண் செய் நன்றி, பாட்டு (சாமி சிதம்பரனார்.)	1
முகல் வேலை (R. P. பாஞ்சாலை.) ...	3
இந்தச் சுதந்திரம், (ஜார்ஜ் பர்னாட்ஷா—பாரதி மொழிபெயர்ப்பு)	61.
அம்பத்தூர், இந்துமதமும்	30
எது நிஜம், (ஆதித்தன்.)	35.
சாசாவின் சமர்த்து, (சே பி. கிருஷ்ணன்) ...	42.
ஆலயமும் விழாவும்	50
காந்தியும் ஜாதிப்பாகுபாடும்	54.
மின்சார ஆலைகளும் அதன் உபயோகங்களும், (A. V சுப்பிரமணியன்)	58.
விதண்டாவாதம், (குறும்புச் சக்தேகி) ...	61.
வைதீகப்பார்ப்பானும், தேசியப்பார்ப்பானும் (பாட்டு)	64.

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என் உடையரேனும் இலர்.

(குறள்.)

மலர் 1. } ஈரோடு 1935 தமிழ் 1. { இதழ் 7.

பெண் செய்ய தகுதி.

(சாமி. சிதம்பரனார்.)

இராகம்—பிலஹரி.

1. பெண்ணைப் பழித்துரைகள் பேசும்—கெட்ட
பேதை மனிதரே கேளீர்!
மண்ணில் உமையொத்த பேரே—இவர்
மதிப்பை இழப்பார்கள் தாமே (பெண்ணை)

2. பத்து மாதம் உமைச் சுமந்தே—பிள்ள
பரிவுடன் பெற்றதாய் மாரே
சித்தம் பெருந்துயர் எற்றே—உம்மை
நிமிர்ந்து நடக்கவே காத்தார் (பெண்ணை)

3. தங்கள் உடல்கலம் இழந்தார்;—உங்கள்
தவிப்பு நீங்கிடப் புரிந்தார்;

பொங்கும் சுவைமிகு பொருளே—பல
புசிக்கக் கொடுத்துமை வளர்த்தார் (பெண்ணை)

4. காளைப் பருவம் நீர் அடைந்தே—கல்ல
காதல் திறம் உணர் போதே
நீளும் விழிமட மாதே—உங்கள்
நெஞ்சில் உறைபவள் ஆமே (பெண்ணை)

5. காட்டை அழித்திடுந் தீயைப்—பெருங்
கார் பெய்து தணிப்பது போலே
வாட்டி உமைச்சுடும் காதல்—தன்னை
வளர்த்துத் தணிப்பவள் மாதே (பெண்ணை)

6. வாழ்க்கைத் துணையுமக் காவாள்—கல்ல
வழியில் நடக்கவே செய்வாள்;
தாழ்க்கை உமையடை யாமே—அவள்
தடுத்து மகிழ்சுகம் தருவாள் (பெண்ணை)

7. வாழும் மலர்மணம் போலே—உங்கள்
வாழ்வில் கலந்துறை வாளே;
தாழும் படிதுயர் செய்தீர்!—சற்றும்
தயவு மனத்தனில் கொள்ளீர்! (பெண்ணை)

8. வெயில் இன்றிமழை உளதோ?—கல்ல
வேலை யின்றிச்சுகம் ஏதோ?
கொய்யும் மலர்க்குழல் மாதார்—தங்கள்
கூட்டம் இன்றியுலகுண்டோ? (பெண்ணை)

9. செல்வம் தருபவள் மாதே;—மகிழ்
செய்தி தருபவள் மாதே;
கல்வி வளர்ப்பவள் மாதே;—சிந்தைக்
கனிவை யளிப்பவள் மாதே (பெண்ணை)

முதல் வேலை.

[R. P. டாக்டர், பாரஞ்சிப்பை.]

இந்திய மக்களுக்கு கன்மை செய்ய முன் வருபவர்கள் முதல் முதலில் இந்திய மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு வரோடொருவர் துவேஷம், வெறுப்பு, பொறாமை இன்றி வாழச் செய்ய முற்படவேண்டும்.

இந்தியாவில் இன்று உள்ள மதங்களான இந்து, இஸ்லாம், கிறிஸ்து, பார்சி, சீக், பௌத்தம் முதலிய எல்லா மதங்களும் பெரிதும் மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதல்லாமல் அம் மதங்களே, மக்களைப் பல வேறு பிரிவுகளாகப் பிரித்து ஒருவரோடொருவர் வெற்றுமை உணர்ச்சியோடு பார்க்கவும் துவேஷ புத்தியுடன் வெறுக்கவுமான நிலையை உண்டாக்கிப் பல பல வகுப்புகளாகப் பிரித்து சின்னாபின்னப்படுத்தி இருக்கின்றன.

இதுமாத்திரமல்லாமல் வகுப்பு உட் பிரிவுகளால் ஒரே மதக்காரர்கள் என்பவர்களுள் இருதுவரும், துவேஷமும், வெறுப்பும் வேறு வேறு மதக்காரர்கள் என்பவர்களுக்குள் இருந்து வருவதைவிடப் பல மடங்கு அதிகமாகவே இருந்துவருகின்றன. உதாரணமாக இந்துக்கள் நான்கு முக்கிய ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றிற்குள் ஒவ்வொரு ஜாதியும் வாளமான உட்பிரிவு ஜாதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த நான்கு ஜாதியும் அவற்றின் உட் பிரிவு ஜாதிகளும் கணிசமற்றும் பல ஜாதிகளை வகுத்து அச்சாதியார்களை கீழ் ஜாதியார்கள் என்று சொல்லி அவற்றிற்குளளும் பல வகுப்புக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் அனேக வகுப்புகள் தொடவும், பழகவும், சிட்டவருங்கலைக்கவும் கூடாதவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

முகமதியருக்குள்ளும் பல பிரிவுகள் இருக்கின்றன.

கிறிஸ்தவர்களுக்குள்ளும் பல பிரிவுகளிருக்கின்றன.

இப்பிரிவுகள்மதாச்சாரத்தை அனுசரித்தே ஏற்படுத்தப் பட்டவைகளாக இருந்தாலும் இந்து மதக்காரர்களைப்போல் தொட்டால் தீட்டு என்று கருதப்படுவதில்லை.

ஆனால் இந்துமதத்தில் இருந்து கிறிஸ்து மதத்திற்கு மாறினவர்களைப் பொருத்தவரையில் அனேகர்கள் அவர் கள் மதம் மாறுவதற்கு முன் எந்த வகுப்பிலும் என்ன நிலையிலும் கருதப்பட்டார்களோ அந்த வகுப்பின் பெயரா லும் அதற்குண்டான நிலையிலும்தான் வைக்கப்பட்டிருக்கி றார்கள். இன்றும் கிறிஸ்துவ மதத்தில் பலர் தீண்டத் தகாத கிறிஸ்தவர்களாகவே இருந்து வருகிறார்கள். அதா வது பறக்கிறிஸ்தவர்களாகவும் பார்ப்பனக்கிறிஸ்தவர்களாக வும் இருக்கிறார்கள்.

இந்த நிலைமையானது இந்தியாவிலுள்ள மொத்த ஜனத் தொகையும் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதன் பயனாகத் தேசத்தின் பொதுலட்சியமோ, மனித சமூ கத்தின் பொதுலட்சியமோ கவனிப்பதற்கில்லாமல் இருக்கும் படி செய்துவிட்டது. இந்நிலைமை முழுவதற்கும் மதங்களே தான் காரணமென்று சொல்லமுடியாவிட்டாலும் மதங்களின் சம்பந்தமாயும் அதன் அடிப்படையான உணர்ச்சியின் பயனா யும் மக்களுக்கு இம்மாதிரியான வெறியும், முறட்டுப்பிடிவா தமும் ஏற்பட்டுவருகிறது என்பதை யார் மறுக்க முடி யும்?

இம்மதப் பிரிவுகளும் அதன் பயனான ஜாதி வகுப்புப்பிரி வுகளும் அவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட தீண்டாமை கெருங் காமை தன்மைகளும் எல்லாம் சேர்ந்து பொதுவான முற்போ க்கை உண்டாக்குவதற்கில்லாமல் தடுக்கப்பட்டே வருகி றது.

ஐரோப்பாவில் அனேக நாடுகள் இந்தியாவிலிருப்பது போன்ற தனித் தனி ஜாதி வகுப்பு, உட்பிரிவு, தீண்டாமை முதலியவைகள் அனுஷ்டிக்கப்பட்டிருக்குமானால் அவை இன் றுள்ள மேன்மையின் நிலையை அடைந்திருக்க முடியுமா?

இந்திய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்து மதமா னது இந்தியர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் புகுந்துகொண்டு ஒவ்வொரு காரியத்திற்கும் மத சம்பந்தமான நிபந்தனை ஏற்பட்டு ஒரு சிறு தவறைக்கூட திருத்திக்கொள்ள முடியாமல் செய்து வருகிறது.

ஆனால் இந்த நிலையில் இன்று இருந்து வரும் மதங்களைச் சீர்திருத்திவிடலாம் என்பதோ, இல்லாமல் மக்கள் உலகத்துக்கு ஏற்றபடியாக மாற்றி அமைத்துவிடலாம் என்பதோ, சுலபத்தில் கருதக்கூடிய காரியமல்ல.

பொதுவாகவே எல்லா மக்களுக்குள்ளும் இருந்துவரும் மத சம்பந்தமான பிரமாதங்களையும், குருட்டுநம்பிக்கைகளையும் காரணக்கு காள் தளர்த்தி, மெள்ள மெள்ள ஒவ்வொரு காரியங் களுக்கும் காரண காரியங்களை தெரிந்து மெள்ள முடியும் படியான அளவுக்கு ஜனங்களைத் தயார் செய்ய வேண்டியது அறிஞர்களுடைய கர்தவ்யமாயிருக்கிறது. அவர்களது பகுத்தறிவை எதற்கும் தயக்கமின்றி காரணமாய் பிரயோகிக்கும் வழக்கம் தான் இந்நாளில் மதங்களையும், ஜாதிகளையும், வகுப்புகளையும் ஏற்படுத்தி நிலைக்கிருக்கும் வெறியை போக்கி ஏற்றுமைகளையும் பொது லக்ஷியத்தையும் உண்டாக்க முடியுமே ஒழிய மத வகுப்புப்பிரமுகர்களுடைய முன்னோர்களை ஏற்பதும்படி செய்துவிட முடியவே முடியாது.

"மதச்சச்சரவுகளுக்குக் காரணம் மதங்களை அரசியலில் இருக்கும் சிற்பந்தங்களும் வாழ்க்கையில் அரசரிக்கத் தேவேண்டிய ஆச்சார அனுஷ்டானங்களும் தான்" என்று மதபக்தர்கள் சொல்லுகிறார்கள். இதுவே சிறிதும் சரியான காரணமாகாது.

மற்றென்ன வெனில் மக்கள் தங்களுடைய நித்திய வாழ்க்கைத் திட்டங்களை மதத்துடன் பிணைத்து அதற்காக அனேக முட்ட நம்பிக்கையான காரியங்களைச் செய்ய பிடிவாதம் செய்வதாலேயே மதப் பூசல்களும் வகுப்புக் கலகங்களும் ஏற்பட இடம் உண்டாகின்றது.

உதாரணமாக, ஒரு முஸ்லீம் தன்னுடைய பள்ளிவாசலுக்குப்பக்கத்தில் ரதா இரயில் வண்டிகள், டிராம்கள், பஸ்கள், மோட்டார்கள் போகும் போக்கு வரத்து சத்தத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; ஆனால் ஒரு இந்து மேளவாத்தியத்துடன் எப்போதாவது ஊர்கோலம் சென்றால் மதம் போய்விட்டதென்று கருதி பெரிய அதிருப்தியடைந்து, கலகத்துக்கு தயாராகிறான்.

அதுபோலவே, ஒரு இந்துவும் பிரிட்டிஷ் பட்டாளங்களுக்காக ஆயிரக்கணக்கான பசுக்களை தினமும் வதைப்பதைப்பற்றியும், ஒவ்வொரு பட்டணங்களிலும் ராஜமான

மாடுகளைக்கொன்று, கசாப்புக்கடைகளில் தொங்கவிட்டு விற்றுக்கொண்டிருப்பதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை; ஆனால் ஒரு முகமதியன் பண்டிகை நிமித்தம் ஒரு பசுவை கொல்லுவதற்குக்கொண்டுபோவானேயானால் இந்து மதமே போய்விட்டவதாகக்கருதி உடனே பெரிய கலகம் செய்யத்துணிந்துவிடுகின்றான்.

சென்னை மகாண பார்ப்பனன் ஒருவன் இரயிலில் பிரயாணம் செய்யும்போதும், கடலில், கப்பலில் பிரயாணம் செய்யும்போதும் தனது பக்கத்தில் பறையன் உட்கார்ந்திருப்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை ஒரு சமயம் ஏதாவது கவலைப்படுவதானாலும் ஒரு "முழுக்குடன்" அக்கவலை தீர்ந்துவிடுகின்றது என்று கருதிவிடுகிறான்.

ஆனால், அதே பார்ப்பான் தான் குடியிருக்கும் தெருவில் பறையன், நடந்தாலும், தான் உபயோகிக்கும் குளத்தில் தாகத்துக்குத்தண்ணீர் குடித்தாலும், அதனால் தனது மதமே கெட்டுப்போய்விட்டதென்று கருதி ஆர்ப்பாட்டம் செய்கின்றான். ஆனால் அக்குளத்தில் வேறு வழியாக எத்தனையோ ஆபாசங்களும் கழிவுகளும் போய்வீழுவதையும் எற்படுவதையும் பார்த்துக்கொண்டே இருக்கிறான். இவ்வாறே அகேகவகுப்புகளுக்குள் இருந்துவரும் உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் கற்பிக்கப்பட்டிருக்கும் வித்தியாசங்களுக்கு ஆதாரமான காரியங்களெல்லாம் மிக அற்பமானவையாக இருந்துவருகின்றன. ஆனால் அவைகளால் ஏற்படும் விபரீதப் பலன்கள் மரத்திரம்வகு தொல்லைகளை விளைவிக்கக் கூடியதாய் இருந்துவருகின்றன. மனிதனைமனிதன் நேசிக்க முடியாமலே செய்துவிடுகின்றன.

இந்த மாதிரியான முட்டாள் தனத்திற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் "சுவிப்ட்" (Swift) என்னும் ஒரு ஆங்கில ஆசிரியர் எழுதிய ஒரு கதையில் லிலிபுட் என்னும் ஊரிலுள்ளவர்களுக்குள் "ஒரு கோழி முட்டையை எந்தப் பக்கத்தில் உடைக்கிறது" என்கின்ற விஷயமாய் ஏற்பட்ட கலகத்தை ஒப்பிடலாம், அவ்வளவு அற்ப விஷயந்தான் மதசம்பந்தமான கலவரங்களுக்குக் காரணமாய் இருக்கின்றன. ஆனால் அதையும்விட மிக அற்பமான விஷயமான, அதாவது நெற்றியில் வைத்துக்கொள்ளப்படும் மதக் குறியைக் கீழே கொஞ்சம் இழுப்பதா? அல்லது வட்டவடிவமாகவே விட்டுவிடுவதா? என்னும் விஷயம் சென்னைப் பார்ப்பனருக்குள்

மிக மிகப் பிரமாதமாய் கருதப்பட்டு இதனால் பெருத்த கல வரங்களும், நீதிமன்றத்தில் சதாவழக்குகளும் கடந்துகொண்டி ருக்கின்றன. இம்மாதிரியான அற்பவித்தியாசங்களுக்கெல்லாம் தத்துவார்த்தங்கள் சொல்லி மழுப்பப்பார்க்கலாம். ஆனாலும் அதில் சம்பந்தப்பட்ட அதிகமான மக்கள் அப்படிப்பட்ட தத்துவார்த்தம் ஒன்றையும் உணராமலே "எதோ சமது கூட் டத்தார்கள் செய்கிறார்கள். ஆதலால் நாமும் செய்வோம்" என்று கருதியே கலகத்தில் சம்பந்தப்படுகிறார்கள். எவ்வள வோ சிறிய அற்ப காரியங்கள் எல்லாம் மதத்தில் சம்பந்தப்படு த்தப்பட்டவுடன் மிக முக்கியமான ஸ்தானத்தைப் பெற்று மக்களைத் தொல்லைப்படுத்துகின்றன.

பூனாவில் "முனிசிபல் சேர்மனா"யிருந்த ஒரு நண்பர் சொன்னது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அது என் னவென்றால், அவர் அந்த "முனிசிபாலிடி"யில் தெருக்கூட்டு கிறவர்கள் குனிந்துகொண்டே கூட்டவேண்டியதான ஒரு குட்டையான கைவிளக்குமாற்றால் கூட்டிக்கொண்டிருந்ததிற் குப் பதிலாக நின்றுகொண்டே கூட்டும்படியான மாதிரியில் நீளமான காம்புள்ள, ஒருகெட்டை விளக்குமாற்றைக்கொடுத்து அதில் கூட்டும்படி சொன்னாராம். அத் தெருக் கூட்டிகள் அந்த நெட்டை விளக்குமாற்றை எடுத்துக்கொள்ளமாட்டோ மென்று சொல்லிவிட்டார்களாம். அதற்கு அந்த சேர்மன் காரணம் கேட்டபோது, நெட்டை விளக்குமாற்றில் கூட்டிய வழக்கம் தங்களுக்குக் கிடையாதென்றும், இன்று புதிதாய் மாற்ற முடியாதென்றும் சொன்னதோடு, கட்டாயப்படுத்தி னால் அது தங்கள் மதத்திற்கு விரோதமான காரியமாதலால் வேலையையாவது விட்டுவிடுவோமே யொழிய நெட்டை விளக்குமாற்றைத் தொடமாட்டோமென்று சொல்லிவிட்டார் களாம்.

இந்துக்களுக்குள் உள்ள ஜாதிப் பிரிவுகளெல்லாம் மத சம்மந்தமாகவும், தொழில் சம்மந்தமாகவும், இடசம்மந்தமாக வும், தேச சம்மந்தமாகவுந்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றனவே யொழிய, அவற்றில் ஒன்றுக்காவது அறிவுக்கும், அனுபவத் திற்கும் பொருத்தமான காரணங்கள் இல்லவே இல்லை.

இந்துக்கள் என்பவர்கள், இம்மாதிரியாகத் தங்களுடைய மதத்தையும், வகுப்பையும், தொழிலையும், தாங்கள் வாசம் செய்யும்படியான இடத்தையுமே ஆதாரமாகக்கொண்டு, பிரிக் கப்பட்டிருக்கின்றார்கள். இக் கான்கு தன்மைகளில் இருந்து

மற்றும் அனேக ஜாதிகள் தோன்ற இடமேற்பட்டன. ஆனால் இவைகளினாலேற்பட்ட உட்பிரிவுகளாகிய அனேக ஜாதிகளுக்கும் முக்கிய காரணமெதுவாயிருந்த போதிலும் கூட, அவைகளுக்கெல்லாம் மத சம்பந்தமான கருத்துக்களே முக்கியமாக்கப்பட்டன.

மற்றும் ஜாதி விஷயங்களில் ஒருவன் பிரவேசிப்பதென்றால் அது மதத்திற்கு நேர் விரோதமென கூப்பாடுபோடப்பட்டும் வந்தது. ஆகையினால்தான் புதிய புதிய ஜாதிகள் அடிக்கடி தோன்றுவதற்கும், ஏற்படுவதற்கும், முடிந்ததேயல்லாமல், இருக்கக்கூடிய ஜாதிகள் யாவும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையடைந்து சினேகிதபான்மையுடன் கன்றாக ஐக்கியமடைவதற்கான அறிகுறிகள் இல்லாமலே போய்விட்டன. சில சீர்திருத்த வாதிகள், எல்லாமக்களும் ஒற்றுமையடைய வேண்டுமெனவும், ஒன்றுசேர வேண்டுமெனவும் வாயில் பேசுகின்றார்கள். ஆனால் அதை அடைவதற்கு மக்கள் யாவரும் தத்தம் ஜாதிகளை அடியோடு ஒழித்துவிட்டு யாவரும் ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்கள் போல வாழ வேண்டுமென உரைத்துவிடுவார்களேயாகில், அப்பொழுது அவர்கள் பாடு மிக்க கஷ்டமாகிவிடும், மூலைக்கு மூலை பல எதிர்ப்புகளும் ஏற்பட்டுவிடும். அன்றியும் சீர்திருத்த விரோதிகள், மற்ற நாடுகளில் கல்வியினாலும் பணத்தினாலும் மக்களுக்குள் இருந்துவரும் வித்தியாசத்தை எடுத்துக்காட்டி, நாமும் மக்களை ஏமாற்றி நமது நாட்டின் ஜாதிவித்தியாசத்தைக் காப்பாற்ற முயற்சிப்பார்கள்.

ஆனால் இந்து மதத்தின் ஜாதியானது மற்ற நாட்டு வித்தியாசத்தைப் போன்றதல்ல. அதாவது மதக்காரர்களில் அனேகர் தாங்கள் என்னதான் கஷ்டப்பட்டு, அருப்பாடுபட்டு, தங்களுடைய சுய முயற்சியால் கல்வியிலும், செல்வத்திலும் முன்னேறினாலும், மற்றவர்களுக்கு இருக்கும்படியான உனனத நிலைமையை தாங்கள் எப்பொழுதுமே எக்காலத்திலுமே, எக்காரணத்தைக் கொண்டும் அடையமுடியாதபடியான நிலைமையில் இந்து மதத்தின் ஜாதிவித்தியாசமானது இருந்துகொண்டு வருகின்றதென்பதை அறிந்தும், தெரிந்து கொள்ளாதவர்களாகவேதான் காட்டிக்கொள்ளுகின்றார்கள்.

பிரம்ம சூத்திரத்தின்படி, இவ்வுலகத்தைப் படைத்த பிரம தேவனுடைய சிரசிலிருந்து பிராமணர்களும், புஜந்

களிலிருந்து கூஷத்திரியர்களும், தொடைகளிலிருந்து வைசி யர்களும், பாதங்களிலிருந்து சூத்திரர்களும் பிரமாவினாலேயே படைக்கப்பட்டிருப்பதாக ஏற்படுகின் றது. இவ்வாறு உரைப்பதனால் அறிவாளிகளும், யுத்தம் புரிபவர்களும், தொழில் செய்பவர்களும், கூலிவேலை அதா வது அடிமைத்தொழில் புரிகின்றவர்களுமென கூறப்படுவதற் கு ஒரு சமாணையாக நான்கு பிரிவுகளையும் ஏற்படுத்தினார்கள். அப்பிரிவுகள் எக்காரணத்தை முன்னாதாரமாகக்கொண்டு ஏற்ப டுத்தப்பட்டிருந்த போதிலும் இப்பொழுது காணப்படும் பல் வேறு ஜாதிகளின் எண்ணிக்கைகளை அனுமதித்துரைப்ப தற்கேயில்லை. மேலும் ஒரு தேகத்தில் சிரசு, பிரம தேவனின், ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு வரு ப்பினர்களுக்கும் ஒவ்வொன்றாக பங்கிட்டு அவ்வங்கமே அக் ஜாதி உற்பத்தியானதற்கும் காரணமென உரைப்பதற்கும் கூட கொஞ்சமும் சாத்தியப்படாது அனைவிலேயே தான் இப்பொழுது காணப்படும் பல்வேறு ஜாதிகளும் பெருகியிருக்கின்றன. அவ் வாறு அந்த பிரம்ம தேவனின் ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு ஜாதியாருக்குப் பங்கிட ஆரம்பித்தோமேயானால் அப்பொழுது ஒவ்வொரு ஜாதிக்கும் அப்பிரம தேவனின் தேகத்திலுள்ள ஓர் அவயவமாவது அல்லது சிறு சிறு மாமிசத்துண்டமாவது அல்லது சிறு காம்பாவது, அல்லது ஓர் சிறிய இரத்த அணுவாவது அவர்களுக்கு பங்கிட்டுக்கொடுக்கமுடியுமானன்பது ஓர் பெரிய சந்தேகமாகவேதான் இருந்து கொண்டு வருகின்றது!

பல்வேறு வகுப்பைச்சார்ந்த மக்களுக்குள்ளும் கலப்பு மணம் என்பது முழுவதும் தடுக்கப்பட்டேதானிருக்கின்றது. கலப்பு விவாகமென்பதைக் கனவிலும் ஒருவரும் கருதவே கூடாது. தங்களை மதத்தைச் சாராதவர்களின் எதிரிலாவது அல்லது அவர்கள் காணும்படியாகவாவது எதாவது சாப்பிடு வதென்பது கூட அறவே தடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இன்னும் சில ஜாதிகளோ, தங்களுடைய இனத்தவர் வர்கள் அல்லது தங்களுடை ஜாதியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய சுமார் நூறு குடும்பங்களையன்றி வேண்டியிருக்கும்படியான அவ்வளவு சிறிய தொகையையும் உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகையினாலே, அவர்களுடைய குடும்பத்திற்குள்ளேயே அவர்கள் தங்களு டைய ஆண்களுக்கும், பெண்களுக்கும் தகுந்தபடி விவாகம் செய்வதற்கில்லாமல் போய்விடுகின்றது. சில சமயங்களில்,

சில வகுப்பினருக்குள் பெண்களே அபரிமிதமாகக் காணப்படுகின்றார்கள். இன்னும் சில வகுப்பினர்களுக்குள்ள ஆண்களே அவ்வாறு அபரிமிதமாகக் காணப்படுகின்றார்கள். இக்காரணத்தால்தான் ஏராளமான ஸ்திரீதனங்களை அளிப்பதனால் உண்டாகக்கூடிய தீமைகளும், பெண்களை விற்பனை செய்வதும், பல தாரங்களை விவாகம் செய்துகொள்ளுவதும் கொஞ்சமேனும் ஒருவருக்கொருவர் பொருத்தமில்ல. விவாகங்களுமாகிய செய்கைகள் காட்டில் அடிக்கடி கடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

மேலும், ஒவ்வொரு சமூகமும் வேறு சமூகங்களோடு சம்பந்தம் செய்து, சிநேகிதபான்மையுடனிருப்பதற்கில்லாத விதத்தில் பலவித தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றபடியினால், பல்வேறு சமூகங்களும் தங்கள் தங்களுடைய ஜாதியாச்சார, அனுஷ்டானங்களுக்குரிய கட்டுத்திட்ட வரம்பிற்குள்ளாகவே இருக்கும்படியாக நேரிடுகின்றது. இக்காரணத்தால் அவர்களுக்குள்ளாக ஒருவர்மீதொருவர் தப்பெண்ணங்கள் கொள்ளவும், பொறாமைப்படவும் மிக்க வசதிகள் ஏற்படுகின்றன. தங்களுடைய ஜாதிக்குப்புறம்பானவர்களைக் காணுமிடத்து, அவர்கள் தங்களுடன் போட்டியிடுவதற்காகவே ஏற்பட்டிருக்கக்கூடியவர்களெனநினைக்கின்றனர். அதனால் அவர்களுடைய ஜாதி உற்பத்தியானதற்குப் பல இழிவானதும், தாழ்வானதுமான காரணங்கள் ஏற்படுகின்றன; இதன்மூலம் அடிக்கடி பல சச்சரவுகளும், சண்டைகளும் நேரிட்டு, அருவருக்கத்தக்கதும், வெறுக்கத்தக்கதுமான அடைமொழிப்பதங்கள் பல, அதேக சந்தர்ப்பங்களில் வினியோகிக்கப்படுகின்றன சில சமயங்களில், அவ்வாறு அவர்கள் உற்பத்தியாவதற்கு விபசாரமும், கெட்ட செய்கைகளுமே காரணமெனவும் கூறப்படுகின்றது. உதாரணமாக, மேற்கு இந்திய பிரதேசத்தில் வசித்துக்கொண்டுவரும் பிராமண வகுப்பாரில் சிலர், அன்னியர்களை விஷமிட்டுக் கொன்று விடுவதில் மிக்க உற்சாகமுள்ளவர்களெனவும், அவர்கள் முக்கியமாக தங்களுடைய மருமகள்மார்களை ஓர்வித பெண் தெய்வத்திற்குப் பலி இட்டுவிடக் கூடியவர்களெனவும் கருதப்பட்டு வருகின்றார்கள். ஆனால் இவர்களுடைய இத்தகைய செய்கைகளுக்கு எந்தவிதமான ஆதாரங்களும் காணப்படாமலிருந்தபோதிலும் கூட, சில ஆண்டுகளுக்கு முன்னதாக இச்செய்தியானது உண்மையாயிருக்கக்கூடுமெனப் பாமர மக்களால் பொதுவாகவே கருதப்பட்டும், நம்பப்பட்டும் வந்தது; அதனால் ஏனைய வகுப்பினர் அந்த வகுப்பைச் சார்ந்த ஓர் ஆடவனிடத்திலிருந்

தும் தாகத்திற்குக்கூட தண்ணீர் வாங்கி அருந்த பயந்து கொண்டே யிருந்து வந்தார்கள்.

மக்கள் நாளா வட்டத்தில் அறிவு வளர்ச்சிக்கான கல்வித் துறையில் முன்னேற்ற மடைந்து கொண்டே வருவதனாலும், போக்குவரத்திற்குரிய சாதனங்கள் பல அபிவிருத்தியடைந்து கொண்டே வருவதனாலும், மக்கள் தங்களுடைய ஜாதிவரரிப்பிற்குட்பட்ட குறித்த ஓர் எல்லையைக் கடந்து, உலக வர்த்தமானங்களை அறிந்து கொள்ளுவதில் அதிக ஊக்கமுள்ளவர்களாகக் காணப்பட்டு வருவதனாலுமே தான் மதத்தின் போராலும், ஜாதியின் போராலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனேக கொடிய தடைகளும், நீர்ப்பந்தங்களும்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வருகின்றன; ஆகையால், தங்களுடைய ஜாதியைச் சாராத ஏனைய வகுப்பினர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போது அவர்களுக்கு எதிரிலேயே, அவர்களுடன் கலந்தும், அவர்களுக்குச் சமமாகவும் உட்கார்ந்து சாப்பிட்டு போஜனம் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கலப்பு விவாகங்களென்பவைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளும், நிர்ப்பந்தங்களும் முன்னிருந்தமாதிரியே தான் இப்பொழுதும் பலமாகவும் வலுமையாகவுமிருந்து வருகின்றன. அவ்வாறிருந்த போதிலும்கூட, பெண்கள் இப்பொழுது அறிவுவளர்ச்சிக்கான கல்வித்துறையில் முன்னேறிக்கொண்டே வருவதனாலும், அவர்களுடைய விவாகவயதானது சிறிது உயர்த்தப்பட்டுக்கொண்டே வருவதனாலும், முற்கூறிய கலப்புமணத்தடைகளும், நிர்ப்பந்தங்களும் சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகின்றன. காளாவட்டத்தில் இவைகள் மறைந்து, இருந்தவிடம் தெரியாமல் போய்விடுமென்பதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றதெனக்கூறுவது மிகையாகாதெனக்கருதுகின்றோம், ஆனால், இச்சம்பவமானது, அதாவது கலப்புமணமென்பது மெதுவாகத்தான் நடைபெறக்கூடும்.

தீண்டாதார் என்று சொல்லக்கூடிய சமூகத்தினர்கள் மிகத்தாழ்வான நிலைமையிலிருக்க வேண்டியவர்களெனக்கருதி, அவர்களைத் தாழ்த்தி வைத்திருக்கும் கொடுமைதான் ஹிந்து மதத்தினால் மக்களுக்கு கேர்ந்த தீமைகளிலெல்லாம் தலை சிறந்து விளங்கக்கூடிய தீமையாக விருக்கின்றது. சுமார் ஆறு கோடி மக்கள் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும்கூட, அவர்கள் யாவரும் ஹிந்து மதத்தைச்

சார்ந்த ஜாதியினர்தான் என்று சிறிதும் கருதப்படுவதே யில்லை தீண்டாதாரெனக் கூறப்படும் இம்மக்களைத் தப்பித் தவறித் தீண்டிவிடுவதும், சில ஊர்களில் அவர்களைக் கண்க ளால் பார்ப்பதென்பதும், சில சமயங்களில் அவர்களுடைய நிழல்படுவது ஓரு தீட்டாகவேதான் பாவிக்கப்பட்டு அனுப வத்தில் இருந்து வருகின்றது

மேலும், தலையோடு தண்ணீர் வார்த்துக்கொண்டு, அதாவது ஓரு முழுக்குப்போட்டோ, அல்லது உடுத்தியிருந்த ஆடைகளை அகற்றிவிட்டு, துவைத்த வேறு ஆடைகளை உடுத்திக்கொண்டாலோதான் அத் தீட்டை நீக்கிக்கொண்ட வர்களாகலாம் எனவும் கருதப்பட்டு வருகின்றது. தீண்டா தாரெனக் கூறப்படும் சமூகத்தைச் சார்ந்த மக்கள் யாவரும் ஆதிகாலத்தில் இந்தியாவில் வசித்துக்கொண்டுவந்த ஆரியர் லாதாரின் சந்ததிகளேயாவார்கள். சமூக வாழ்க்கையின் அவசியத்திற்குத் தேவையாகயிருக்கும் சிற்சில தொழில்க ளைப் புரிந்து வருவதே அவர்களுடைய கடமையெனக் கருதப் பட்டும், அத் தொழில்களேதான் அவர்களுக்குப் பொதுவா கவே அளிக்கப்பட்டுவந்தன.

எவ்வாறிருந்தபோதிலும், ஓரே ஜாதிக்குள் அநேக உட் பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டும், வளர்த்துக்கொண்டும், மேல்கீழ் நிலை ஏற்படுத்திக்கொண்டும் வருவதேதான் இந்துமக் களுடைய மனப்பான்மையாக இருந்துகொண்டு வருகின்றது. மற்றும் தீண்டாதாரெனக் கருதப்பட்டுவரும் சமூகத்தின ரில் அநேக உட்பிரிவுகள் அவர்களுக்குள்ளாகவே ஏற்பட்டு ஓருவரை மற்றொருவர் தீண்டப்படாதாரெனவேதான் கருதி வருகின்றார்கள்.

இவைகள் எப்படி இருந்தபோதிலுங்கூட கல்வியறிவா னது மக்களுக்குள் பரவி வருவதின் பயனாய், மக்கள் கல்வித் துறையில் முன்னேறிக்கொண்டே செல்லுவதால் தீண்டாமை யென்பது கொஞ்சங்கொஞ்சமாகப் புறக்கணிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றது. தீண்டாதாரெனக் கூறப்பட்டு வரும் மக்களே தங்களுடைய உரிமைக்காகப் போராடவேண் டுமெனக் கருதி உழைத்துக்கொண்டும் வருகின்றார்கள். புதி யதாக நிறுவப்பட்ட சீர்திருத்தச் சட்ட சபைகளும் தீண்டா தாரின் நிலைமையை உயர்ந்த வேண்டுமெனக் கருதி, அதற் காக முயற்சித்துக்கொண்டும் வருகின்றன.

மக்கள் யாவரும் இவ்வாறு பல்வேறு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால்தான, தாங்கள் யாவரும் ஒரே தேசத்தினர் என்கிற உணர்ச்சி அவர்களிடம் வளர்ந்து வருவதற்கு இடமில்லாமலிருந்துவருவதுடன், தேசிய உணர்ச்சியையே அடியோடு நாசமாக்கிக்கொண்டும் வருகின்றது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஜாதியையே பிரதானமாகக் கருதிக்கொண்டிருப்பதனால்தான் அயலாரொருவரால், செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களுக்கும் வகுப்புந்காரணமே பிரதானமென்கின்ற மிக்க இழிவான ஓர் காரணம் கூறப்படுகின்றது.

மேலும் சர்க்காரின் உத்தியோகங்கள்கூட, ஒருவர் அக்குறித்த வேலைக்குத் தகுந்த திறமை வாய்ந்தவராகவும்; தகுதியுடையவராகவும் இருக்கின்றாரென்பதைக் கவனியாது ஜாதியை அனுசரித்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையிலேயேதான் அவ்வுத்தியோகங்கள் வழங்கப்படவேண்டுமெனவும் உரைக்கின்றார்கள். இதுவுமல்லாமல் சட்டசபையை அனுசரித்த எதாவதொரு நிர்மானத்திலாவது அல்லது அதை நிறைவேற்றுவதிலென்பதாவது எதாவதொரு சமூகமோ, வகுப்போ அல்லது ஜாதியோ பாதிக்கப்பட நேரிடுமாவென்பதைக் கவனித்தாராய்ந்தே செய்ய வேண்டியதாகவுமிருக்கின்றது. வகுப்புப் போராட்டங்கள் நேரிடாதவாறும், எல்லா சமூகத்தினருக்கும், எல்லா வகுப்பாருக்கும், எல்லா ஜாதியாருக்கும் திருப்தியை அளிக்கத் தக்கதுமான முறையிலேதான் இந்த அரசியலின் நிர்வாகம் கடைபெற்றுக்கொண்டு வரவேண்டியிருக்கின்றது. அடிக்கடி நேரிடக்கூடிய வகுப்புப் போராட்டங்களின் பயனாய் அரசியல் நிர்வாகம் அதிகமாகப் பாதிக்கப்படுவதால் மக்களின் தேசிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடுவதற்குத் தயாராகயிருக்கக்கூடிய யக்கள் அனைதையே ஓர் காரணமாகக் குறங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, சர்க்கார் தங்களுடைய செய்கையை அவ்வளவிலேயே நிறுத்திக்கொள்ளவாவது அல்லது அதனின்றும் பின்னடையும்படியாகவாவது செய்துவிடுகின்றார்கள்.

தற்காலமிருந்து வரக்கூடிய அரசாங்கமும் பல்வேறு வகுப்பினர்களுக்குள்ளும் நேரிடக்கூடிய வகுப்புப்போராட்டங்களையும் சச்சரவுகளையும் அறவேயொழித்துவிடுவதற்கான முறைகளில் ஈடுபட்டு, அவைகளையேதான் கையாண்டு கொண்டு வந்தார்களென முழுவதுமே உரைத்துவிடமுடியாது.

அன்னியரின் ஆட்சி இந்தியாவில் சுலபமாக கடைபெறுவதற்கு இந்தியர்கள் யாவரும் பல்வேறு வகுப்பினராகவும்

ஜாதியினராகவும் பிரிந்து நிற்பதுதான் காரணமாதுமெனச் சிலர் உரைக்கலாம். இந்தியர்கள் யாவரும் தங்களுடைய மதத்தின் காரணமாகவும், ஜாதியின் காரணமாகவும் பிரிந்து தனித்தனியாக நின்றுகொண்டு வருவதை அறவே விட்டொழித்து, அந்த எண்ணங்களையே நாசமாக்கவேண்டும். தாங்கள் யாவரும் ஒரேமதத்தைதத்தான் சார்ந்தவர்கள், ஒரே ஜாதியைத்தான் சார்ந்தவர்கள்; ஒரே தேசத்தைதத்தான் சார்ந்தவர்களென்கிற எண்ணங்களால் தூண்டப்படவேண்டும். இவ்வாறு யாவரும் ஒற்றுமையடைந்து ஒரு கூட்டமாகி முன்னணியில் வந்து எப்பொழுது நிற்க ஆரம்பிக்கிறார்களோ அப்பொழுதுதான் மேலே கூறிய கூற்றானது மிகைபடுத்திக்கூறும் கூற்றெனவும், லக்ஷியம் செய்யவேண்டாத கூற்றெனவும் கருதப்படும். இல்லாவிடில் அக்கூற்று உண்மையேயாகுமென்பதில் ஐயமில்லை.

வகுப்பு பேதங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் மதசம்பந்தமான உணர்ச்சியானது மக்களின் மனதிலிருந்து அறவே நீக்கப்பட்டுவிட முடியுமானால் இந்தியாவைப்பீடித்த குறைகள்யாவும் மிக்க சுலபமாகவே நிவர்த்திக்கப்படக்கூடும். இந்திய தேசீய வீரர்களில் அதிகர் தங்களுடைய பழமையான காரீகமானது மதத்தையேஅடிப்படையாகக்கொண்டதெனவும், மதமே அதற்கு மூலகாரணமெனவும், மதமே அதற்கு அஸ்திவாரமெனவும், மிக்க இனிமையாகவும்பெருமையாகவும், கௌரவமாகவும் கூறிக்கொள்வதிலும்பிரசாரம் செய்வதிலும் மிக விருப்பமுள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஆனால் இந்தியாவின் பிரச்சினைகள் சுலபமாகத்தீர்க்கப்பட முடியாமல் அதிக சிக்கலாக இருந்துகொண்டு வருவதற்கும் இந்தியாவானது இதர தேசங்களைப்போல் முன்னேறாமலிருந்துகொண்டு வருவதற்கும் மக்களுக்குள்ளிருந்துவரும் இத்தகைய உணர்ச்சியேதான்—இதே உணர்ச்சிதான் காரணமாகுமேயல்லாமல் பிறிதொன்றும் காரணமாகவே ஆகாதென்பதை அவர்கள் உணர்ந்து அறிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு அறிந்துகொள்வார்களேயானால் அப்பொழுது தற்கால மக்களால் கடைமுறையிலனுஷ்டிக்கப்பட்டு வரும் மதத்தை நாம் என்னதான் சீர்திருத்தங்கள் செய்து அம்மதத்தை ஓழுங்கு படுத்திய போதிலும் சரியே, அல்லது வேதங்களை நாம் எவ்வளவுதான் உண்மையென நம்பி அவைகளைப் பின்பற்றி அவைகளையே கட்டிக்கொண்டு அழுதபோதிலும் சரியே, அல்லது நமது கற்பனா சக்தியினுதவியால் இந்தியாவானது

ஆதிகாலத்தில் எவ்வளவுதான் உன்னதமான நிலையிலிருந்த தாகக் கூறிக்கொண்டே வந்தபோதிலும் சரியே, அவைகள் யாவும் இதரதேசத்தார்கள் இந்தியாவைக்கண்டு மதித்து மரியாதைசெய்யும்படியான நிலைமையையோ, அல்லது புகழப்படும் படியான நிலைமையையோ ஒருக்காலும் உண்டாக்கவே உண்டாக்காதென்னும் ஓர் தள்ளமுடியாத— தடுக்கமுடியாத முடிவுக்கேதான் வரக்கூடும்.

மக்கள் தங்களுடைய பழங்கதைகளையும், பழமையான பெருமைகளையும் நினைத்துக்கொண்டும் அவைகளையே கூறிக்கொண்டும் தங்களுடைய வாணாட்களை வீணாட்களாக்காமல் இருக்கவேண்டும். தாங்கள் தற்காலமிருக்கக் கூடிய நிலைமையிலும், தங்களுடைய எதிர்கால வாழ்க்கையிலுமே கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்.

மானம்டைந்தபிறகு ஆத்மாக்களுக்கு விமோசனமேற்படுகின்றதா? அவ்விமோசன மேற்படவேண்டுமானாலென்ன செய்யவேண்டுமென்பவைகளில் கவலைபூண்டு, அவைகளில் தங்களுடையநேரங்களை வீணாகச்செலவழிப்பதை விட்டொழிக்கவேண்டும்; உயிருடனிருக்கும் இச்சமயத்தில் நாம் எத்தகையவுதவிகளை மற்றவர்களுக்குப்புரிந்து அவர்களுடைய கஷ்டங்களிலிருந்து அவர்களை மீட்கக் கூடும்? என்பதில் கவனம் செலுத்தவேண்டும்; தங்களைப்போல் உயிருள்ள மானிடர்களுக்கு உதவி செய்யாமல் இயற்கையை மீறி அல்லது இயற்கைக்கு விரோதமாக நின்று கொண்டிருப்பதாகக் கூறப்படுபவைகளுக்கு அடிமைப்படும்படியாக இப்பொழுது மக்கள் நடந்து கொண்டுவரும் தன்மையானது மாறவேண்டும்; இவ்வகையில் மக்களுக்குள் பகுத்தறிவு விருத்தியடைவதற்கான முறைகளிலேயே அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவானது தான் நியாயமாகவே அடையவேண்டிய ஓர் நிலைமையை நிரந்தரமாகவும், சாஸ்வதமாகவுமடைய முடியும்.

தற்காலம் இந்தியாவிலிருந்துவரும் மதங்களையும் ஜாதிகளையும் அடியோடழித்து நிர்மூலமாக்குவதிலேயேதான் ஒவ்வொரு இந்திய தேசீய வீரனும் தன்னுடைய முழுக்கவனத்தையும் இப்போழுது செலுத்திக்கொண்டு வரவேண்டும். ஏனெனில் காலாவிதத்திலும் அவன் முன்னேறுவதை தடைப்படுத்தக்கூடிய முட்டுக்கட்டைகள் இந்த ஜாதி மதங்களினிருந்து கொண்டு வருகின்றன.

—:0:—

இந்தச் சுதந்திரம்!

S. L. பாரதியார் M. A. B. L. மொழிபெயர்ப்பு.

(உலக அறிஞர்களில் ஒருவராகிய ஜார்ஜ் பர்னாட்ஷா ஒலி பரப்பும் கருவியின் மூலம் சமீபத்தில் செய்த பேருரை)

[‘மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமைத்தளைகளில் பிணைப்புண்டு கிடக்கிறதைக்காண்கிறோம்’ என்று ரூசோ 170 ஆண்டுகளுக்குமுன்னால் சொன்னார்.

‘சுதந்திரம் சமத்துவம் என்பனவற்றைப்பற்றிய பொய்யுரைகளை விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியாது அவைகள் உங்களிடத்தில் இல்லை” என்று உரைக்கின்றார்பர்னாட்ஷா இன்று.]

கனவான்களே? கனவாட்டிகளே! சுதந்திரத்தைப்பற்றிய பழைய வழக்கமான அரட்டுப்பிரசங்கம் செய்ய எனக்கு இன்றிரவு அவகாசமில்லை என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். நேராக நாமெடுத்துக்கொண்ட விஷயத்திற்குள் புகுவோம். ஒருவன் பூரண சுதந்திரமுடையவனாயிருப்பதென்றால் என்ன? ஒருவன் தான் விரும்புவனவற்றை, விரும்புகிறகாலத்தில், விரும்புகிற இடத்தில் செய்யக்கூடியவனாயும், அல்லது தனக்கிஷ்டமானால் ஒன்றும் செய்யாமலே இருக்கக்கூடியவனாயுமிருக்கும் தன்மை, என்று விளங்குகிறது. ஆனால், அப்படிப்பட்ட புருஷன் ஒருவனுமில்லை; அப்படிப்பட்ட புருஷன் ஒருவனுமிருக்கவும் முடியாது.

நாம் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும் நமது வாழ்க்கையில் மூன்றில் ஒரு பாகத்தை [பாதியே உறங்கிப்போம் என்றார் ஒரு தமிழ்ப்புலவர்] தூக்கத்தில் கழிக்கவேண்டும்; குளிப்பதிலும், உடுத்துவதிலும், களைவதிலும் போம் சில போழ்து; உண்பதிலும், குடிப்பதிலும் ஓரிரண்டுமணி நேரம் செலவிடவேண்டும்; அங்குமிங்கும் அலைவதில் அனேகமாய் அவ்வளவு காலம் செலவழிக்கவேண்டும். ஒரு பகலில் பாதியை நாம் தள்ளிவிட முடியாது. இத்தியாதி அத்யாவசியங்களுக்கு காலத்தைச் செலவிடவேண்டி-

அடிமைகளாக இருக்கின்றோம். நாம் ஆயிரம் சேவகர்களைப்படைத்த அரசர்களாயிருந்தாலும், அன்றி நம்மனைவியரைத் தவிர்த்து வேலைக்காரர்களில்லாத உழைப்பாளர்களாயிருந்தாலும் இது விஷயத்தில் ஒன்றுதான். மனைவியரோ உலகத்தில் ஜனத்தொகையை அபிவிருத்தி இருக்கவேண்டுமானால் அவர்கள் மக்களைச் சுமந்து பெற்றல் என்னும் மற்றொரு பாரமான அடிமைத்தனத்திற்கு ஆளாயிருக்கவேண்டும். இத்தகைய இயற்கை ஏவல்களை நாம் கள்ளிவிட முடியாது. ஆனால் இவை நாம் புறக்கணிக்கக்கூடிய இதர அலுவல்களுக்கு ஆதாரமாயிருக்கின்றன. நாம உண்ணவேண்டும், எனவே உணவைத்தேடிக்கொள்ளவேண்டும்; நாம் உறங்கவேண்டும், எனவே நமக்குப் படுக்கைகளும் வீடுகளும் காற்றோட்டமும் வேண்டும்; இன்னும் நமக்கு நடப்பதற்குத் தெருக்களும், நமது நிர்வாணத்தை மறைப்பதற்கு ஆடைகளும் வேண்டும். உணவு, வீடுகள், உடைகள் இவைகளை மனித உழைப்பால் ஆக்கலாம். ஆனால் ஆலைகள் ஆகிய பின்னர் களவு போகக்கூடியன.

நீங்கள்தேனை விரும்பினால், தேனீக்கள் தம் உழைப்பினால் சேகரிக்கச்செய்து, பின்னர் அவைகளிடமிருந்து தேனைத்திருடிக்கொள்ளுகிறீர்கள். உங்களுக்கு அங்குமிங்கும் அலைந்து கால்கடையாகத்திரிவதற்கு மிகுந்த சோப்பலாயிருந்தால் ஒரு குதிரையை அடிமையாக்கிக்கொளகிறீர்கள். ஒருகுதிரையையோ ஒரு தேனீயையோ நீங்கள் எவ்விதமாக நடத்துகிறீர்களோ, அவ்விதமாகவே நீங்கள் ஒரு மனிதனையோ, பெண்ணையோ, குழந்தையையோ அவர்களிடத்து பலாத்காரமாகவோ, மோசடியாகவோ, எவ்விதப்பட்ட பொய்யாலோ, அல்லது அவர்களுடைய சுதந்திரத்தை உங்களுக்குத்தியாகம் செய்வது அவர்களுக்கு மதக்கடமை என்றுகூடப்போதிப்பதினாலோ, அதிகாரம் பெறக்கூடுமானால், அவர்களை ஆட்டிவைக்கலாம்.

ஆகையினால் எச்சரிக்கை!

ஒரு மனிதனையோ, ஒரு வகுப்பினையோ நீங்கள் உங்கள் மீது அதிகாரமுடையவர்களாக ஆக்கிவிட்டால் அவர்கள் வாழ்வதற்கு இயற்கையிலேயே தாங்கள் எதெதற்கு அடிமையாக இருக்கவேண்டுமோ, எவற்றையெல்லாம் உங்கள்பால் கள்ளிவிடக்கூடுமோ அவற்றையெல்லாம் உங்கள் முதுகின்மீது சுமத்தி விடுவார்கள். நீங்கள் அப்புறம் தினசரி 8 முதல் 14 மணி நேரம் வேலை செய்ய வேண்டியவர்களாகி விடுவீர்கள். நீங்கள் உங்களைபம் உங்கள் குடு

ம்பத்தையுமட்டுமே காப்பாற்ற வேண்டியவர்களாக இருந்தாலோ இதில் பாதிகாலத்திலோ அதிலும் குறைந்த காலத்திலோ சௌகரியமாக வேலை செய்தால் போதும்.

இந்தவிதமாக ஒருவர் பாரத்தை மற்றவர்மீது சுமத்தி விடாதபடி தடுப்பதே யோக்கியமான எல்லா அரசாங்கங்களின் நோக்கமாக இருக்கவேண்டும். ஆனால் இன்று ஆட்சி செலுத்தும் அரசுகளின் நோக்கமோ நாம் வருந்தக்கூடிய விதமாக இதற்கு நேர்மாறாக இருக்கின்றது. அவை உங்களுடைய அடிமைத்தனத்தையே பலவந்தமாக வற்புறுத்தி அதனையே சுதந்திரமெனக் கூறுகின்றன. ஆனால் அவ்வரசுகள் உங்கள் முதலாளிகளுடைய போராசைகளுக்கு சில வரம்புகளேற்படுத்தி உங்களுடைய அடிமைத்தனைகளை ஒருவாறு அளவுபடுத்துகின்றன.

நீக்ரோ சாதியினரைப் பண்டங்களைப்போல் விற்க வாங்க செய்கிறார்கள். அந்த அடிமை வியாபாரம், கூலிக்கு உழைக்கும் அடிமைத்தனத்தைவிட அதிக விலையாக இருந்தால், அவ்வரசுகள் அடிமை வியாபாரத்தை ஒழித்துவிட்டு, நீங்கள் எதாவதொரு தொழிலையோ, அல்லது முதலாளியையோ தெரிந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற சுதந்திரத்தை அளிக்கின்றன. இந்நிலையும் நீங்கள் தேங்கித் தெருவினில் நிற்பதேயாமாயினும், இதனைச் சுதந்திரத்தின் உன்னதமான வெற்றியெனப் பறைசாற்றுகின்றன.

இயற்கை அன்புடையது.

மனிதன் இயற்கைக்கு, இயற்கை வழிகளில் அடிமையாக இருப்பதற்கும், மனிதன் மனிதனுக்கு இயற்கைக்கு மாறாக அடிமையாக இருப்பதற்கும் உள்ள மற்றொரு பெரிய வித்தியாசம் கவனிக்கற்பாலது.

இயற்கை தன்னுடைய அடிமைகளிடத்து அன்பு காட்டுகின்றது. உங்களை உண்ணவும் குடிக்கவும் நிர்ப்பந்தம் செய்கிறது, ஆனால் உண்பதையும் குடிப்பதையும் எவ்வளவு இனிமையாக்கி விடுகிறதென்றால் நமக்கு வசதியிருந்தால் நாம் அளவுக்கு மீறி உண்டும் குடிததும் விடுகிறோம்.

நாம் உறங்கவேண்டும் அல்லாவிடில் பைத்தியம் பிடித்துவிடும்; ஆனால் உறக்கம் எவ்வளவு சுகமாக இருக்கிறதென்றால் நமக்கு காலையில் எழுந்திருப்பதற்குக்கூட கஷ்டமாக இருக்கிறது. நல்ல வீடுகளும் குடும்பங்களும் இளைஞர்களுக்கு எவ்வளவு இன்ப

தினவுகளாகத் தோன்றுகிறதென்றால் அந்தினவுகளை அணுபவிப்பதற்காகச் சீக்கிரமாக மணம் செய்து கொள்கிறார்கள்.

இயற்கையாக எழும் தேவைகளையும் பற்றுக்களையும் அடிமைத் தளைகளென இகழ்வதற்குப் பதிலாக நாம் அவைகளைத் திருப்தி செய்வதில் கிடைக்கும் அதிகமான இன்பத்தை அனுபவிக்கிறோம். அவைகளை மெச்சிப் புகழ்ந்து பல மன வெழுச்சி தரும் கவிகளைப் பாடுகிறோம். ஊர் சுற்றிக்கிரியும் பிச்சைக்காரனும் இக்கையுபாட்டுகளால் கவலையற்ற முறையில் வயிறு வளர்த்துக்கொள்கிறான்.

மனிதன் மனிதனுக்கு அடிமை என்பதோ இதற்கு நேர் விரோதமானது. அது நமது உயிருக்கும் உடலுக்கும் வெறுப்பைத் தருவது. நாது கவிகள் அதனைப் புகழ்வதில்லை: அவர்கள் ஒருவன் மற்றொருவனை அடிமையாக ஆட்கொள்ளக்கூடியகல்லவனொருவனும் யாங்ஙணும் இல்லையென்றே பறைசாற்றுகின்றனர். மார்க்சு என்னும் பெரியார் யூதர்களுக்குள் தோன்றிய பெரிய முனிவருள் கடைசியாக வந்தவர். அவர் தன்னுடைய வாழ்க்கை அனைத்தையுமே ஒருண்மையை ஸ்தாபிப்பதற்காகச் செலவிட்டார். அது "மனிதனுக்கு மனிதன் அடிமையாயிருக்கும் தன்மை சட்ட திட்டங்களுக்குள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் உலகத்தில் சுயநலம்பற்றிய கொடுமைகள் எவை எவையுண்டோ, அவை அனைத்தும் அது நமக்களிக்கும். அதன் விபரீதப்போக்கை நீங்களே காணலாம். அது ஓயாத உள்நாட்டுக் கலகங்களை விளைவித்துக்கொண்டே இருக்கின்றது. அதுதான் தொழிலாளிகளும் முதலாளிகளும் தங்களை தனித்தனிக்கொள்கைகளிலிருந்து பிரித்துக்கொள்வதும் அவர்களுக்குள் எற்படும் வகுப்பு வாதமுமாகும்" என்பதே.

தாமஸ்மூர் என்ற ஒரு பெரியார் (நந்தனாரைப் போன்றவர். இப்பொழுது அவரை ஒரு புனித ஆத்மா ஆக்கி விட்டனர்.) "அடிமைத்தனத்தை பூராவும் ஒழிப்பதின் மூலம் இவ் வகுப்புச்சண்டை ஓய வேண்டும் இன்னும உலகத்தொழில்களில் தன் பங்குவேலையை ஒருவன் மற்றொருவன் மீபரில் சுமத்திவிடாதபடி, தன்னுடைய கைகளாலும், மூளையாலும் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தவேண்டும். இன்மேல் நாம் ஒரு அமைதியான நிலையான சமூகமாக வாழ முடியாது" என்று கூறி இருக்கிறார்.

முதலாளி வர்க்கம்.

முதலாளி வகுப்பிற்கு, அதனுடைய சட்டசபைகள் மூலமாகவும், பள்ளிக்கூடங்கள் பத்திரிகைகள் மூலமாகவும், நமது அடிமைத்தனத்திலிருந்து நாம் நீங்கிவிடாதபடி நம்மைத்தடுப்பதற்கு வேண்டிய பகீரதப் பிரயத்தனங்களைச் செய்வது இயற்கையாகவே இருக்கிறது.

மற்றும் நம்முடைய அதிபால்யமான குழந்தைப்பிராயத்திலிருந்தே, நமக்கு, நமது நாடு சுதந்திர நாடென்றும்; நமது முற்பிதாக்கள் ஜான் அரசனை மகத்தான பத்திரத்தில் (Magna Charta) கையெழுத்திடச்செய்த காலத்திலும், ஸ்பானியர்களுடைய பெரும் கப்பற்படையைத் தோற்கடித்த காலத்திலும், சார்ல்ஸ் அரசனின் தலையை வெட்டிய காலத்திலும், வில்லியம அரசனை உரிமைகளை வழங்கச் செய்த காலத்திலும், அமெரிக்கர்களுடைய சுதந்திர வெளியீட்டை ஆதரித்து ஆறுமதித்த காலத்திலும், ஈட்டன் விளையாட்டுப்பூமிகளில் ட்ரபால்கர், வாட்டர்ஜி முதலிய சண்டைகளில் வெற்றியடைவதற்கு அடிகோலிய காலத்திலும், இன்னும் வெகு சமீபகாலத்தில் ஒருவரும் நினைக்காத விதமாக, ஜர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி இவற்றை குடியரசுகளாக மாற்றியகாலத்திலும், இச்சுதந்திரப்பேற்றை நாம் பெற்றோமென்று, நமக்குக் கற்பிக்கப்படுகிறது.

இதென்ன அநீதி என்று நாம் கேட்கத்துணிந்தால் நமக்கு வாக்குரிமையிருப்பதினால் எல்லாத்துன்ப விளைவுகளையும் நாமே தான் உண்டுபண்ணிக்கொள்கிறதாகச் சொல்லப்படுகிறது.

வாக்குரிமையினாலென்ன நன்மையிருக்கிறதென்று கேட்டால், "தொழிற்சாலைச்சட்டங்கள், சம்பள நிர்ணய போர்டுகள், இலவசக் கல்வி, உபசாரச்சம்பளங்கள் முதலியன ஏற்படவில்லையா இதனிலும் அதிகமாக என்ன நியாயமாக எதிர்பார்க்கமுடியும்" என்று கேட்கிறார்கள்.

இன்னும் பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாலில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி இன்னும், அதிகமாகவேக்கூட வருமானவரி கொடுக்கிறதாகவும் ஞாபகப்படுத்துகிறார்கள். ஆனால் ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்துவிடவேண்டியதாயிருப்பதுடன் தாங்கள் சுதந்திரமாக இருந்தால் எவ்வளவு வேலை செய்யவேண்டியிருக்குமோ அதனிலும் இரண்டொரு

மடங்கு தினசரி அதிகமாக உழைக்கவேண்டியதாயிருக்கிறதே என் பதை எடுத்துச்சொல்வோர் யாருமில்லை.

வால்டையர் (Voltaire) ரூசோ (Rousseou) காபட் (Cobbett) ஷெல்லி (Shelley) காரல்மார்க்ஸ் (Karl Marx) லசல்லி (Lasalle) லெனின் (Lenin) ட்ராட்ஸ்கி (Trotsky) போன்ற அறிஞர் இந்த ஏமாற்றுப்பிழைப்பை எடுத்துக்காட்டும் பொழு தெல்லாம் அவர்களை நாஸ்திகர்களென்றும், காலிகள், கொலை காரர்கள், அயோக்கியர்களென்றும் எளிதில் சொல்லிவிடுகிறார்கள். இன்னும் அவர்களுடைய புத்தகங்களை வாங்குவதையோ, விற்ப தையோ பெருங்குற்றமாக்கித்தண்டிக்கிறார்கள்.

அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் ஒரு புரட்சியை உண்டுபண்ணினால் இங்கிலாந்து முதலிய தேசம் உடனே அவர்களுடன் சண்டைபோடுகிறது. மற்றவல்லரசுகளுக்கும் அவைகள் தன்னுடன் சேர்ந்து புரட்சிக்காரார்களை அட க்கி ஒடுக்குவதற்கும் அடிமை வாழ்வை நிலைநாட்டுவதற் கும், பண உதவி செய்கிறது. இத்தகைய ஒப்பந்தம் (waterloo) வெற்றி ஆளித்தவுடன் அது ஆங்கில சுதந்திரத்தின் மற்றொரு வெற்றியென உலகமுழுவதிலும் பறையடிக்கப்படுகிறது. கூலிவா ங்கிப்பிழைக்கும் ஆங்கிலேய தொழிலாளிகளோ, பைரன் பிரபுவைப் போல் இதற்காகத்தக்கப்படாமல் அவ்வெற்றுரையைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

ரஷ்யாவில் 1922-ல் நடந்ததுபோல் புரட்சி வெற்றியடைந்தால் சண்டை ஓய்கிறது; ஆனால் அதைப்பற்றிய பொய்களும், வீண் புகார்களும், அவதூறுகளும் அத்தேசம் ஒரு முதலதரமான படையுள்ள வல்லரசு ஆகவளரும் வரை அதிகரித்துக்கொண் டேயிருக்கின்றன.

எமது ராஜதந்திரிகளோ, புரட்சித் தலைவர்களை வருஷக்கணக்கில், எல்லோராலும் இகழத்தக்க போக்கிரிகள் மூர்க்கர்கள் என்று தூற்றிவிட்டு அப்புறம் அவர்களையே மரி யாதையாக வரவேற்று விருந்து செய்கிறார்கள்.

அளவுகடந்த அயோக்கியத்தனம்.

இத்தகைய அளவுகடந்த அயோக்கியத்தனத்தால்—அடி மைத்தளைகளால் கட்டுண்டு கிடக்கும்மக்களை ஏமாற்றவேண் டுமென்று நினைத்தாலும் அது கடைசியாக முதலாளிவர்க்க த்தினருடைய முழு ஏமாற்றத்திலேயே முடிவடைகின்றது.

ஒரு பணக்காரனை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் பணக்காரப்பிள்ளைகளுக்கான ஆரம்பப்பள்ளிக்கூடத்திலும் பின்னால் உயர்தரப்பள்ளியிலும் அதன் பின்னர் சர்வ கலாசாலையிலும் படிக்கிறான். அவனுடைய புத்தியானது ஒரு சாதாரணமான தொழிலாளியினுடைய புத்தியைவிட அத்தகைய இடங்களில் கற்பிக்கப்படும் பொய் நிறைந்த சரித்திரங்களினாலும், அயோக்கியத்தனமான பொருளாதார நூலினாலும் தானும் தன் வகுப்பினரும் மேலானவர்கள் என்ற எண்ணங்களாலும் கெட்டுப்போய்விடுகிறது. அவன் தனது அகம்பாவத்தினால் தன்னுடைய உடைகளைச் சுத்தம் செய்தும் இன்னும் டல கூலி வேலைகள் செய்தும் பொருள் தேடுகிற தொழிலாளிகளை விட தன்னை உயர்ந்தவனாகக் கருதிக் கொள்கிறான். தன்னுடைய நிலையை அவன் திருப்தியாக ஏற்றுக்கொள்கிறபடியால், அவன் தன்னை அத்தகைய திருப்திகரமான நிலையில் வைத்து, தன்னுடைய சக்திகளுக்கேற்ப மரியாதை வழங்கும் ஒரு முறை, முற்றிலும் நியாயமானதென்றும், அதன் பாதுகாப்பிற்காக தன்னுடையவும் தம்முடையவும் உயிரையும் கொடுக்கவேண்டுமென்றும், உண்மையாகவே நம்புகிறான். ஆனால் நாம் கேவலமாக நடத்துகின்ற-போதுமான கூலி கிடையாத தொழிலாளிகளும், உழுவர், பயிர்த்தொழில் செய்வோர், சமூசாரி, வரிப்பழுவைத்தாங்கமாட்டாத சமூசாரிகளும் கூட இத்தகைய கனவானைப் போன்று இம்முறையில் உயர்வைப்பற்றி அவ்வளவு நிச்சயமாகக் கருதுவதில்லை.

உண்மைகளெல்லாம் இதற்கு நேர்விரோதம். இப்போதைப்போலுள்ள கஷ்டகாலங்களில் அவர்களுடைய மனக்கொதிப்பும் திக்கற்ற தன்மையும் அவர்களை தங்கள் நிலையை எற்றியுதைத்து மிதித்துத் தள்ளிப்போராடச்செய்கிறது.

சக்ரவர்த்தியாகவேண்டுமென்ற ஆசையும், சந்தர்ப்பம் வாய்த்தகாலையில் அதற்கேற்றதைரியமும், புத்தியும் ஊக்கமும் நெப்போலியனைப்போன்ற திறமையும இருப்பவர்கள், அவர்களை வெறும் கேவலமானக் கூட்டத்தினராய் நின்றுவிடாதபடி மீட்கவேண்டியிருக்கிறது. ஆனால் சக்கரவர்த்திக்கு ஜே! என்று கூக்குரலிடுகிற அந்த அடிமைகள் அவர்களுடைய சுதந்திரம் சம்பந்தப்பட்ட வரையிலும் இதற்குப்பதிலாக ஒரு பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கா வாக்குரிமைச் சீட்டில் ஒரு கோடுகிழித்திருக்கலாமல்லவா?

புத்தியற்ற தலைவணங்கும் கோஷ்டியினர்.

இதுவரை நான் சாதாரணமான சரித்திர இயற்கை நிகழ்ச்சிகளையே குறிப்பிட்டேன். அவற்றிலிருந்து நான் ஒரு முடிவையும் சொல்லவில்லை அது வீண் வாதத்திற்கிடந்தரும், நீங்கள் பதில் சொல்லமுடியாத நிலைமையில், வாதத்திற்கு இடமாகப்பேசுவது எனக்கு அழகல்ல. நான் ஓவிபரப்பும் கருணை மூலம் பேசுவதால் அவ்விதம் செய்வதில்லை. தகுந்த நிதான புத்தியிருந்தாலன்றி வெகு அபாயத்திற்கிடமானமுடிவு களுக்கு நீங்கள் வரக்கூடுமானதால் நான் உங்களை யாதொரு முடிவு கட்டும்படியாகவும் சொல்லவில்லை.

எவனும் தன்னை அடிமை என் று சொல்லிக்கொள்ள இஷ்டப்படுவதில்லை. வாஸ்தவம். ஆனால் இதிலிருந்து அடிமைத்தனம் ஒரு நன்மை கலவாத கெட்டகாரியமென்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்

பொதுமக்கள் பயந்து தலைவணங்கி கீழ்ப்படியும் அதிகாரிகள் எப்படியிருக்கவேண்டுமென்பதைப்பற்றி அரிஸ்ட்டாட்டில் (Aristotle) முதலிய பேரறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் "அவர்கள் விலையுயர்ந்த பட்டாடைகளால் அழகுபெறத் தங்களை அணிந்துகொள்ளவேண்டும். ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ள வேண்டும். அதிகார தோரணையிலேயே பேசவேண்டும். நவரத்னங்களால் இழைக்கப்பெற்ற ரதங்களிலேனும் கிடைத்தற்கரிய பரிகளிலேனும், புஷ்பத்தொடர் வண்டிகளில் முதல்வகுப்புகளிலேனும், வெளியேற வேண்டும். தனக்கு வேண்டிய எதையும் சேவகர்களாலேயே செய்து கொள்ளல் வேண்டும் இம்மென்றால் இருநூறு வேலையாட்களும் மணி அடித்தால் பலபணியாட்களும் உடனே ஓடிவர வேண்டும்." இப்படியெல்லாமிருந்தால் தான் அதிகாரம் கடைபெறுமாம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. அவர்கள் பொதுமக்கள் மனதிலே தெய்வ சக்தி உடையவர்களாக விளங்கவேண்டுவதற்கான மட்டிலும் வேறுபயனொன்றுமில்லாவிட்டாலும் அவர்களுக்கு குபேர சம்பத்துடையவர்களாகக் காண்பிக்கும்படி செய்யவேண்டும். சுருங்கச் சொன்னால் மக்களை கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரர்களாகவும், சட்டத்திற்குப்பயந்து நடக்

கும் குடிகளாகவும் இருக்கவேண்டுமானால் அவர்களை அறி வற்ற தலை வணங்கும் கோஷ்டியினராகச் செய்யவேண்டுமாம்.

சாதாரணச் தொழிலாளிகளிற் பத்தில் ஒன்பது பேர்க ளுக்கு வாக்குரிமை இருப்பினும், அவர்கள் தங்கள் வகுப்பின ரைச் சேர்ந்தார்களுக்கு வாக்குக் (Vote) கொடுக்கும்படி அவர் களில் ஒரு சிலரைத் தூண்டுவதற்கும் எத்தனை பெரிய பிர யத்தனங்கள் எடுத்துக்கொள்ளவேண்டியதிருக்கிறது. பெண் களுக்கு வாக்குரிமையும் பாராளுமன்ற (Parliament) த்தில் அமரும் உரிமையும் கல்கியபொழுது என்ன நடந்தது. தொழி லாளிகளுக்காகப் பல வருடங்கள் போற்றத்தக்க அரிய பெரிய சேவைகள் செய்தவர்களும், அவர்களுடைய சுதந்திரத்திற் காக பாடுபடுபவர்களுமான, பெண் அபேட்சகர் (Women Candidates) கள் அனைவரையும் தோற்கடிப்பதற்காகவே பெண்கள் முதல் முதலாகத் தங்கள் வாக்குரிமைகளை உப யோகப்படுத்தினார்கள். அவர்கள் ஒரே ஒரு பெண்ணைப் பொறுக்கி யெடுத்தார்கள். அவள் யார்? பெரும் பணமும் பட் டமும், பதவியும் பார்ப்போர் மனதைக் கவரும் அழகும் படைத்த ஓர் மாதரசி. இவை மேற்கூறிய போரிஞர் கூற்று களை விளக்குகின்றனவாம். காமாகத் தேடிக்கொண்ட தேட் டுகளேயாம். (Artificial Products)

இதுவே இயற்கையாக உள்ள மனித சுபாவமாம். மனி தசுபாவத்தையோ மாற்றமுடியாது. ஆனால் மற்றொருபுறம் உலகத்திலே மனித சுபாவத்தைப்போன்று எளிதிலே மாற்றக் கூடியதொன்றுமில்லை என்று வற்புறுத்தப்படுகிறது. எப் பொழுது? அதை இளமையிலேயே பிடித்து வளைக்கவேண் டும். ஏன் அடிமைத் தொழிலாளிகளின் தலை வணக்கமும், கொடிய முதலாளியின் அக்கிரமும் குழந்தைப் பிராயத்திலே யேயிருந்து புகுத்தப்படுகிற தொட்டிற்பழக்கமும், பள் ளிப்பிராயத்திலே அளிக்கப்படுகின்ற கல்வியால் ஊட்டப்பட்ட பயனுமே அன்றிப் பிறிதில்லை. வேறாய கல்வியாலும், பிரசா ரத்தாலும் மாறாய மனோபாவத்தை உண்டுபண்ணலாம் என வாதிக்கப்படுகிறது. இந்த விஷயத்தைபபற்றி நீங்களே உங்கள் மனதில் ஆராய்ந்துகொள்ளுங்கள். நான் உங்கள் மனதை ஒரு விதத்திலும் கலைக்க விரும்பவில்லை.

இவைகளுக்கெல்லாம் அடிப்படையாகவும், ஆதாரமாகவு மிருப்பது ஒரே ஒரு முக்கியமான—உபயோகமான கேள்வி

தான். தேச முழுவதிலிருந்தும் கிடைக்கின்ற வருமானத்தை தினசரி எப்படி பிரித்துப் பங்கிட்டால் கலமென்று பார்க்க வேண்டும், விவசாயத்தில் பூமியைப் பரந்த நிலங்களாகப் பிரித்து, மோட்டார் இயந்திர ஏர்களால் உழுது பயிரிட்டும், ரசாயனக் கலைகளின் பிரகாரம் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட உரங்களிட்டும், விவசாயம் செய்கிறதாகவும் பொருளூற் பத்தியில் ஒரு சிறு பெண்கடத்தக்கூடிய பல இயந்திரங்களால் நிறையப் பெற்றதும் மின்சாரத்தின் [Electricity] சக்தியில் செலுத்தப்பட்டதுமான தொழிற்சாலைகள் பெருகியிருப்பதாகவும் வைத்துக்கொண்டால் விளையும் பயன்கள் எத்துணை பெரிதாக இருக்குமென்றால் நாம் அவைகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதாகயிருந்தால் அதிகாரிகளுக்கும், விசாரணைக்காரர்களுக்கும் கலைவிற்பன்னர்களுக்கும் எவ்வளவுகிடைக்கிறதோ அவ்வளவுக்கு சாதாரணமான தேர்ச்சியற்ற தொழிலாளிகளுக்கும் கிடைக்கிறதாகவிருக்கும்.

ஆனால் அன்னிய அரசியின் காலத்தில் ஆயிரம் பேரால் ஆக்கக்கூடிய பொருள்களை தற்கால இயந்திரங்கள் ஒரு பெண்ணால் ஆக்கக்கூடியதாயிருக்கின்ற கதைகளை நாம் கேட்கும்பொழுது இத்தகைய அபரிமிதமான அதிகரிப்பில் நாம் உண்ணவோ, குடிக்கவோ உடுக்கவோ முடியாததான உளசிகள், இரும்பாணிகள், எழுதுகோல்கள் முதலிய பொருள்களும் சேர்ந்திருக்கின்றனவென்பதை நாம் மறக்கக்கூடாது. பச்சைக் குழந்தைகள் உளசிகளையும், கெருப்புக் குச்சிகளையும் கூடத் தின்னும். ஆனால் அவை நுகிகரமான உடம்புக்கேற்ற ஆகாரமன்று.

பூமியைப்போலவே நாம் இப்பொழுது வானையும் பயன்தரச் செய்யலாம். வானதிலிருந்து (Nitro-gen) உப்புவாயுவெனும் ஆகாயத்தை இழுத்து பசும்புல்லை அதிகரித்து நல்லதாக்கலாம். அதன்மூலம் நமது ஆடுமாடுகள் முதலியன வளர்ந்து விருத்தியாகி பாலும், வெண்ணையும், முட்டைகளும் அதிகமாகக் கிடைக்கலாம் ஆனால் ரசாயன சாஸ்திரிகள் ஆசை மிகுதியால் தன்னைக் கசக்கி பிழிவதைத் தடுப்பதற்காக இயற்கை அன்னை திடீரெனப் பல தந்திரங்களை உபயோகிக்கலாம்.

தொகுத்துச் சொன்னால்!

மொத்தமாகச் சொல்கிறேன். காலமெல்லாம் உங்களிஷ்டப்பிரகாரமே கழிக்கலாம்என்ற நம்பிக்கையை உங்களுடைய

சுதந்திரக் கனவுகளினின்றும் அழித்துவிடுங்கள். தினசரி 12-மணி நேரங்களுக்காவது இயற்கை உங்களைச் சில காரியங்களைச் செய்யும்படி கட்டளை இடுகிறது. அவைகளைச் செய்யாவிட்டால் உங்கள் உயிருக்கே பங்கமேற்படும். எனவே வேலைக்காக மிகுந்தது 12-மணி நேரம். இதிலும் நீங்கள் தாமாகவாவது, அல்லது மற்றவர்கள் மூலமாகவாவது பிழைப்பிற்கு வழி தேடிக்கொள்ளவேண்டும்; இன்றேல் இயற்கையால் அழிக்கப்படுவீர்.

நீங்கள் ஒரு காகரீகமான காட்டில் வசித்தால் வரிகளும், விதந்களும் கொடுக்கும்படிசெய்து அதைச் செய், இதைச் செய்யாதே என்று பணிக்கின்ற மெய்காப்பாளர்களாலும், சேவகர்களாலும் (Police) பரிபாலிக்கப்படுகிற சட்டங்கள் உங்கள் சுதந்திரத்தைக் குறைத்துவிடுகின்றன. நீங்கள் இச் சட்டங்களை மீறினால் நியாயஸ்தலங்கள் உங்களை காராகிரகத்திலிடும், இன்னும் அதிக்ரமித்தால் உங்களுயிரைப் போக்கும். சட்டங்கள நியாயமானதாக இருந்து பட்சபாதமின்றிப் பரிபாலிக்கப்பட்டால் குறைகூற நியாயமில்லை. ஏனென்றால் அவைகள் நம்மை, அடிபிடிச் சண்டைகள், வழிப்பறி, கொள்ளை முதலிய ஒழுங்கினமான செய்கைகளினின்றும் காப்பாற்றுவதின் மூலம் நமது சுதந்திரம் அதிகரிக்கின்றது.

நெருக்கடியான கட்டுப்பாடு!

ஆனால் இன்று சமூகக்கட்டுப்பாடு அமைந்து கிடக்கும் நிலைமையில் உங்களை இன்னுமதிக நெருக்கமாகப் பிடித்துக் கொண்டிருக்கிற கட்டுப்பாடொன்று இருக்கிறது, அதுதான் உங்களுடைய முதலாளிகளுடையவும், ஜமீன்தாரர்களுடையவும் அதிகாரம். நீங்கள் காளிக்குப் பதிலாக மாரி கோவிலுக்குப்போனதற்காக, அல்லது தான் குறிப்பிட்டவரை விட்டு வேறு யாருக்கேனும் வாக்குரிமை செய்தீர்களென்பதற்காக, அல்லது நீங்கள் கடை திறக்தீர்கள் என்பதற்காக அல்லது வைத்தியம் செய்கிறீர்கள் என்பதற்காக என்று ஏதோ ஒரு காரணம் சொல்லி நிலத்தைவிட்டு ஜமீன்தார் உங்களை ஓட்டிவிடலாம்.

நீங்கள் இத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்றும், உங்கள் ஆடைகளின் நிறம், அளவு, விதங்கள் இப்படி இருக்கவேண்டுமென்றும்

உங்கள் முதலாளி உங்களுக்குக் 'கட்டளையிடலாம், வேலை யற்றவர்கள்' என்ற வாழ்க்கையில் சிதறிவாடும் பரிதாபகர மான கூட்டத்தில் சேர்த்துமீங்கள் தெருவில் நிற்கும்படி எந்த நேரத்திலும் செய்துவிடலாம். அவன் உங்கள் மேல் செலுத்துகிற அதிகாரம் ஒப்பற்றது. அதற்குமுன் எந்த அரசியல் சர்வாதிகாரியின் அதிகாரமும் கூட எம்மாத்திரம்? இதற்கு உங்களுக்கு என்ன பரிகாரமிருக்கிறது? தொழிலாளிகளின் ஸ்தாபனம் கையாடும் 'வேலை நிறுத்தம்' ஒன்றுதான். இது எதிரியின் வாசற்படியில் அவன் நியாயம் செய்யும் வரை உண்ணாவிரதமிருக்கிறதென்ற பழையதொரு கிழ்நாட்டவர் தந்திரமான சண்டித்தனத்தைத் தவிர வேறென்ன?

இந்தநாட்டிலோ மெய்காப்பாளர்கள் போலீசார் உங்களை முதலாளிகளின் வாசற்படியில் பட்டினி கிடக்கவிடமாட்டார் களாதலால் உங்களுக்குகுடியிருக்க ஏதேனும் வீடு இருந்தால் அதில்தான பட்டினி கிடக்கவேண்டும். வேலை நிறுத்தத் தில் அதிதீவிரமானது எல்லா வேலைக்காரர்களும் ஒரே சமயத்தில் செய்கிற பொது வேலை நிறுத்தம். அதுதான் மனிதர்கள் தவறிவிழும் பிழைகளிலும் அதிதீவிரமானதாகும். ஏனென்றால் அதைக் கடைசிவரை கொண்டுவந்ததினால் மனித வர்க்கமே ஒருவாரத்தில் அழிந்துவிடும். தொழிலாளர்களே முதலில் உயிர் துறப்பர். அதனால் பொது வேலை நிறுத்தமென்பது தொழிலாளர் சங்கம் பைத்தியம்பிடித்தாகும். ஒருசமயத்தில் ஒரு வேலை நிறுத்தத்தை நடத்தி மற்றைய தொழிலாளர்கள் எல்லாம் அதிகமாக உழைத்து அதற்கு உதவி செய்வதே தொழிலாளர் சங்கத்தின் புத்திசாலித்தனமாகும்.

எண்ணிக்கை!

எண்ணிக்கையில் இந்த விஷயத்தை ஆராய்வோம். நீங்கள் 12 மணிநேரமும் வேலை செய்யவேண்டியதாய் இருந்தால் உங்களுக்குச் சுதந்திரமே இல்லை. நீங்கள் 8 மணி நேரம் வேலை செய்தால் உங்களிஷ்டப்படி கட்டக உங்களுக்கு 4 மணி காலம் கிடைக்கும். அதுவும் காட்டுச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு, படக்காட்சிகளையோ, பந்தய விளையாட்டுகளையோ பார்ப்பதற்கோ, கவர்ச்சியுள்ள புத்தகத்தை வாங்குவதற்கோ இன்னும் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கோ தேவையான காசு கையிலிருந்தால் தான் கிட்டும். இதி

லும் இயற்கையால் விளையும் இன்னல்கள் பல. உங்களு டைய 8 மணி நேர வேலையும், உங்கள் உடலுக்கு அதிக வருத்தத்தைத் கொடுக்கும் உழைப்பாயிருக்கலாம். வீட்டிற் குப்போனதும் மீத்த 4 மணி நேரத்தையும் என்னுடைய புத் தகத்தினை வாசித்து அறிவை வளர்க்க விரும்புகிறீர் கள். ஆனால் பாவம் அரை நிமிஷத்தில் அயர்ந்து தூங்கி விடுகிறீர்கள். உங்கள் அறிவு இப்பொழுதிருக்கிறபடியே இரு க்க நேரிடுகிறது.

ஆகையால் நம்மில் பத்துக்கு ஒன்பது பேர் அதிகமான சுதந்திரத்தை விரும்புகிறோமல்லவா. அதனால்தான் ஓலி பரப்பும் கருவியை காதுகொடுத்துக்கேட்கிறோம். இப்பொழு திருக்கிறபடியே வாக்குரிமையும் வாய்க்கரிசியும் போதுமான நிம்மதியாக இருந்துகொண்டிருக்கும் வரை, நாம் ஒருவர்க் கொருவர் சொல்லிக்கொள்ளும் யோசனை ஷேக்ஸ் பீயர் ஆரி யர் சொல்லியிருக்கிற பிரகாரம் 'பையிலே பணத்தைப்போடு' என்பதேயாகும். சம்பளம் போடுகிற காளையில் நம்முடைய பைக்குள் வருகிற பணமோ வெளியே சொல்லக்கூடியதில்லை. அந்த வாரத்தின் பாக்கிக்காலத்திலெல்லாம் மற்றவர்கள் அத ற்குள்ளிருந்து பணமெடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். எனவே இந்தயோசனை பலனளிப்பதாயில்லை. நாம வேண் டுவன நமக்குக் கிடைப்பதற்கு நமது கொள்கைகளை நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். அதுவரை நாம் சுதந்திரத்தைப் பற்றி அளந்துகொண்டிருக்கிற வீண் பேச்சுகளை நிறுத்த வேண்டும். ஏனென்றால் ஆங்கிலேய மக்களுக்கு மொத்த மாக சுதந்திரமென்றால் என்னவென்று தெரியாது. அவர்கள் சுதந்திரத்தை அனுபவித்ததே கிடையாது.

சுதந்திரத்தை, அதனுடைய பழைய ஆங்கிலப் போரான "ஓய்வு காலம்" என்றே அழைக்கவேண்டும். உண்மை உரை ப்பின் பிரதிபலனாக அதிகமான ஓய்வு நேரத்திற்கும், அதனை இன்புறக் கழிப்பதற்காக அதிகமான பொருளுக்கா கவும் கிளர்ச்சி செய்துகொண்டு இருக்கவேண்டும். பிரிட்டா னியா இக்நிலை எய்தும்வரை ஆளுக என்று கூச்சல் போடு வதை நிறுத்தவேண்டும், அதுவரை நமது சுதந்திரம், அதின்பேரில் நமக்குள்ள நாட்டம், ஆகியவைகளைப்பற்றிப் பேசுகிற எந்தப்பாராளுமன்ற அபேட்சகர்களுக்கும் நமது வா க்குரிமையை வழங்கக்கூடாது. ஏனென்றால் அவன் எந்த அர சியல் கட்சியைச் சேர்ந்தவனாயினும் அவனுடைய உள்ளத்

தலே அவன் தன் தகுதிக்கேற்ப சட்டங்களுக்கும் அகப்ப டாமல் கம்முடைய உழைப்பினால் வாழ விரும்பும் வீணனாக வே இருப்பான்.

ஓய்வு காலத்தில் என்செய்வது.

வழக்கத்திற்கு மாறாக நமக்குராளமான ஓய்வுகாலமும் பணமும் கிடைக்கிறதாக வைத்துக்கொள்வோம்.. அவைகளி னால் என்ன செய்யப்போகிறோம். சிறு பிராயத்திலே சோம் பலாயிருப்பவர்கள் தீய எண்ணங்களால் தீண்டப்படுவதென் றும் "சோம்பலென்பவர் தேம்பித் தினிவர்" என்றும் படித்தி ருக்கிறோன். மனிதருக்குப் பலிசு வந்தகாலையில் அவர்கள் இன்பத்தையும், சுகத்தையுமிழந்து, கடைசியாக நல்லுண்டி அருந்துவதற்குப் பதிலாக விஷமுண்டவரைப்போல் உயிரிழக் கவும் நான் பார்த்திருக்கிறோன். நம் சரியாகப் பழக்கப்பட் டிருந்தாலன்றி நமது ஓய்வு காலங்களைக்கழிக்கும் வகையைத் தெரிந்துகொள்வது எளிதான காரியமே அல்ல.

ஆகையால் நீங்கள் தருமார்த்தமடையக்கூடிய ஒரு தந்தி ரமான கேள்வி போடுகிறேன் அதனைச்சிந்தனை செய்யும்படி செய்து நான் எனதுபேச்சைமுடித்துக்கொள்ளுகிறேன். தினசரி 8 மணி நேரம் வேலைசெய்து நாற்பத்தைந்தாவது வயதில் உபகாரச் சம்பளத்துடன் ஓய்வெடுத்துக்கொள்வீர்களா? அல்லது தினசரி நான்கு மணி நேரம் வீதம் எழுபதாவது வயது வரை உழைப்பீர் களா? உங்களிஷ்டப்படி விட்டால் எதை விரும்புவீர்கள்? இத ற்குப் பதில் தயவுசெய்து எனக்கு அனுப்பவேண்டாம். உங் கள் மனைவியுடன் கலந்து பேசுங்கள்.

"கலியாணம்! கலியாணம்!! நல்ல வேடிக்கை!!! இந்தி யாவில் கலியாணம் உண்டா? உண்டென்று யார் சொல்லத் துணிவார்கள்? இந்தியாவில் பெண்களை மனித வர்க்கத்தில் சேர்த்திருக்கிறார்களா? தகப்பனுக்குப் பிடித்த புருஷனுக்கு பெண்கள் பலியிடப்பெறுகிறார்கள். அவன் கிழவனா, குமா ரனா, அழகனா, விரூபனா, கூனனா, குருடனா, ஏழையா, சீமானா என்று யாராவது பார்ப்பதுண்டா?

ஸ்ரீமதி பி. கே. ராவ்.

அம்பத்காரும், இந்துமதமும்.

இந்து மதத்தில் இருந்து அம்பத்காரும், தாழ்த்தப் பட்டவர்களும் மாத்திரமே அல்லாமல் இந்துக் கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் தீண்டாதவர்கள் என்பவர்கள் நீங்கிய சுமார் 17 கோடி பேர்களும் கூட இந்து மதத்தை விட்டு விலகவேண்டியவர்களேயாவார்கள்.

இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை என்றுகாந்தியாரே ஒப்புக்கொள்ளுகிறார்.

இந்தியாவுக்கு மகமதியர்கள் முதலிய அயல் காட்டார்கள் வந்த காலத்தில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேச வகுப்பு மக்கள் கடைத்துகொண்டுவந்த கடவுடிக்கைகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பல் வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபடு கடவுள்கள் முதலாகியவைகளுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்துமதம் அதாவது இந்தியர்களின் மதம் என்பதாக பெயரிட்டு விட்டார்கள்.

அக் காலத்தில் இருந்த திராவிடர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரியர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், மலைகாட்டு மக்கள் பழக்கவழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்து மதம் என்றும், பிரம்ம சாமாஜமும் இந்துமதம் என்றும், வேதாந்தமும் இந்துமதம் என்றும், கடவுளையும் மதத்தையும் சரீரத்தையும் உயிரையும் துறந்த துறவறமும் இந்து மதம் என்றும் பவுத்தர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், நாஸ்திகர்கள் கொள்கைகளுக்கும் இந்து மதம் என்றும் இப்படிப் பலவிதமாய் அவர்கள் அதாவது கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் தவிர மற்ற எவர்களது கடவுடிக்கைக்கும் இந்துமதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது இந்தியர்களின் மதம் எனச்சொல்லி விட்டார்கள்.

ஆகவே இந்து மதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அருத்தமே ஒழிய ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்

ஸகளுக்கு இந்து மதம் என்று பெயரில்லை. என்றாலும் அக் காலத்தில் ஆரியர்கள் சிறிது செல்வாக்குப் பெற்று இருந்த தால் அவர்கள் தங்கள் பழக்க வழக்கம், சடங்கு, தங்களின் வழிபடு கடவுள்கள், ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கிவைத்துக் கொண்டிருந்தபடியால் ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு, கடவுள் அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும் மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டு விட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும் ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட விவகாரத்திற்கு இடமில்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்துக்காகவே எல்லாம் இந்து மதம் தான் எல்லோரும் இந்துக்கள்தான் என்றும், அதுவும் இந்து மதம் இதுவும் இந்துமதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொளகையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், என்றும் பல சமயங்கள் சேர்ந்தது இந்து மதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்துமத மாக இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும்இந்து மதத் தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள் சமணர்கள் ஜெயினர்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் இந்து மதத்தில் இருந்து வந்தது தான் என்றும், இந்து மதத்துக்கு பொருத்தமானதே என்றும் சொல்லி பொதுவாக இன்று முகமதியர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இந்துமதம் என்பதாக இந்துக்களுடைய பழய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும் ஒரு வார்த்தை கூட கிடையாது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு இந்துஸ்தான் என்று ஒரு வார்த்தை காணப்படலாமோ என்னமோ அதுகூட திட்டமாய் சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர்கூட இந்து மத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அருத்தம் என்று பழய அதாவது சுமார் 100, வருஷம் 200 வருஷம் முந்திய

ஐரோப்பிய ஆகராதிகளையும் ஐரோப்பிய கலைகளையும் பார்ப்போமானால் மகமதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களுக்குச் சொல்லும் மதப்பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும் தான் காணப்படுகின்றனவே அன்றி வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காணமுடியவில்லை.

இந்து மதம் பிரத்தியக்ஷத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால் விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை-உயர்வு தாழ்வுகளை பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம் தான் இந்த உலகத்தில் வேறு எந்த தேசமக்களிடத்திலும்வேறு எந்த மதஸ்தரிடத்திலும் இல்லாத குணங்கள் கொண்டு இருந்து வருகிறது.

இந்த இரண்டு காரியங்களைப்பற்றி அறிஞர்கள் என்பவர்கள் வெகுகாலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும் அவசியமற்றது என்றும் முடிவுகட்டிவிட்டார்கள், அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்குமஉபதேசமும் இருந்துவருகிறது. இவைகளையும் இந்துமத ஆதாரமாகவும், அப்பெரியார்களையும் இந்துமதத்தில தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு விக்கிர ஆராதனையில் கம்பிக்கை இல்லாதவனும் ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும் இகழ்பவனும் கூட இந்துதான் என்றும், அதற்கும் ஆதாரம் இந்துமதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே இப்போது எது இந்துமதம் எது இந்துமதம் அல்லாதது என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஆனால் தேசியத்தலைவர்கள் மதத்தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியார் முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச்சொல்லுகிறார்கள் என்று பார்த்தால்வருணாச்சிரமத்தை பரிசுத்தமாக்கி நிலைநிறுத்துவது தான் இந்துமதம் என்கிறார்காந்தியார். கனிமண்ணும் கங்கை ஜலமும்கூடவே இருக்கவேண்டியது தான் இந்து மதம் என்று செய்துகாட்டுகிறார் மாளவியார்.

மகமதிய ஆதிக்கம் தலையெடுக்காமல் செய்வது தான் இந்து மதம் என்கிறார் மூஞ்செயாரும் பாமானந்தனாரும். மற்றபடி சங்கராச்சாரிகளுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? இராமானுஜாச்சாரியாருடைய இந்துமதம் எப்படிப்பட்டது? பண்டாரசன்னதிகளுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? மனுதர்ம சாஸ்திர இந்துமதம் எப்படிப்பட்டது? இதிகாசமாகிய கீதையுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? சைவர்களுடையஇந்து மதம் எப்படிப்பட்டது? மற்றும் பார்ப்பனரல்லாத சைவர்கள் இந்துமதம் எப்படிப்பட்டது? வைணவர்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப்பற்றி நாம் விவரிக்க இதில் இடம் வைத்துக்கொள்ளவில்லை.

எப்படி இருந்தாலும் இஸ்லாமியர்களைப்போலவும் கிறிஸ்தவர்களைப் போலவும்மதம் என்பதற்கு இருந்துவரும் ஆதாரம், கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்பதாகவதுவும் இல்லாமல் வாழ்க்கை முளவில் குருட்டு அபிமான முளவில் இந்துமதம் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த லட்சணத்தில் உள்ள இந்துமதம் ஒரு மனிதனைத் தீண்டக்கூடாதவன் என்றும், ஒரு மனிதனை தரிசிக்கக்கூடாதவன் என்றும், ஒரு மனிதனை தரிசிக்கக்கூடாதவன் என்றும் சொல்லிக்கொண்டு உரிமையும் பாராட்டி 100க்கு 97 மக்களை சுயமரியாதையற்றவர்களாக்கி 100க்கு 25 மக்களைத் தீண்டாதவர்கள் சண்டாளர்கள் என்று இழிவு படுத்திவருவதென்றால் இப்படிப்பட்ட இந்த மதம் உலகத்தில்எதற்காக இருக்கவேண்டும்? இது அழியோடு ஒழிக்கப்படுவதில் என்ன தப்பு? என்றுதான் கேட்கின்றோம்.

ஜாதி அகம்பாவம்பிடித்த சோம்பேறிப் பார்ப்பனீயக்கூட்டம் தங்களது சுயநலங்களை உத்தேசித்து இந்துமதம் ஒழியக்கூடாதப்படமாட்டார்கள் என்பதோடு "இந்துமதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது உங்கள் பாட்டனாலும் முடியாது" என்று சொல்லுவார்கள். ஆனால் அது வேறு விஷயம். தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆள் இந்துமதத்தை விட்டுவிடுகிறேன் என்றும் "சண்டாளர்கள்" "இழிமக்கள்" என்று சொல்லக்கூடிய ஒருகூட்டமக்களின்

மகாநாட்டில் "இந்துமதத்தை விட்டுவிடவேண்டும்" என்று ஒரு தீர்மானம் செய்தவுடன் இமயமலை முதல்கன்னியாகுமரி வரையில் உள்ள தேசீயத்தலைவர்கள் தேசீயபத்திராதிபர்கள் மகாத்மாக்கள் மாளவியாக்கள் இந்துமதத்தலைவர் கள் 'வீரர்கள்" "திடாகிகள்" "சத்தியாக்கிரகிகள்" எல்லோருக்குமே தலையில் இடிவிழுந்தது போல் ஆகிவிட்டதுடன் இதற்காக எத்தனைபொய் புரட்டு, எமாற்று, தந்திரம் ஆகிய இழிகாரியங்கள் எல்லாம் செய்து "அம்பேத்கார் அவ்வளவு பெரிய மனுஷன் அல்ல" என்றும் "பம்பாய் மாகாண தீண்டப்படாதார் மகாநாடு தக்கபிரதிநிதித்துவம் பொருந்தியது அல்ல" என்றும் தாங்கள் கூப்பாடுபோடுவது போதாமல் அவ்வகுப்பிலேயே பல வயிற்றுச்சோற்றுக் கருப்பன்களைப் பிடித்து ஒருதிராம் இரண்டு திராம் சாராயம் வாங்கிக்கொடுத்து எழுதச்சொல்லியும், எழுதினதாக ஒப்புக்கொள்ளச்சொல்லியும் இவ்வளவுபாடுபடுவதைப் பார்க்கும் போதே மூடியாது என்று சொல்லுபவர்கள் உண்மையாக நம்புகிறார்களா அல்லது பயந்து நடுங்கி அப்படி உளருகிறார்களா என்பது விளங்கும்.

இந்து மதம் காளுக்கு கால் ஓழிகிறதா இல்லையா என்பதும் பிறமதம் காளுக்கு கால் ஓங்குகிறதா இல்லையா என்பதும் ஒரு 50 வருஷம் ஜனகணிதத்தைப்பார்த்தால் தானாகவே விளங்கும்.

ஆகையால் இந்துமதத்தை ஓழிக்கவேண்டுமென்று முயற்சி செய்தவர்கள் இப்பார்ப்பனர்களுடைய மிரட்டலுக்கு பயப்படாமல் சித்திரத்தில் படம் எழுதக்கூட ஒரு இந்துவின் பழய சின்னம் இல்லாத அளவுக்கு இந்துமதம் என்னும் புரட்டான ஒருகட்டும் சூழ்ச்சியும் அழியவேண்டியது அவசியம் என்றும் அது அழிந்து போகப்போவது உறுதிதான் என்றும் தைரியமாய்க்கூறுவோம்.

குடி அரசு

உயர்ந்த ஜாதி பிராமணர்கள் இந்திரிய நிக்கிரகம் செய்வதில் பேர்பெற்றவர்களாம். அந்த பிராமண ஜாதியிலிலதான் பாலிய மணமும், குழந்தைத் தாய்மாரும் ஏறாளம்.

ஸ்ரீமதி, பார்வதி, சந்திரசேகரய்யர்.

எது நிஜம்?

ஸ்தல மகிமைப் போராட்டம்.

உலகத்தில் மக்களாய்த் தோன்றிய அனைவருக்கும் இன்றியமையாதனவாகக் கூறப்படும் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கென்றும், இவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், அதனையடையும் மார்க்கங்கூறுவதல்லது, வீடென்பது இன்னது இப்பெற்றித்து என்று கூற முடியாதென்பதும் பழைய நூலாசிரியர் கொள்கையாகும்.

இங்ஙன மாயவீடு அடைவதற்குரிய சாதனங்கள் எண்ணிறந்தனவாகச்சான்றோர் என்பவர்களால் கூறப்படுகின்றன. அவை காயத்திரி மந்திரம் செபித்தல், ராமா எனல், கிருஷ்ணா எனல், சிவா எனல், விபூதி பூசுதல், நாமமிடுதல், தீர்த்தமாடுதல், கோத்திரம் பாடுதல், அநுஷ்டானம் முதலியன செய்தல், பெரியாரைக்காணல், அவர்பால் உபதேசம் பெறுதல், ஆகன்படி நடத்தல், விக்கிரக ஆராதனை செய்தல், சிவதலம் செல்லல், சிவதலத்தை மனதால் நினைத்தல் முதலானவைகளாகும். அவைகளில் ஸ்தலங்களில் சென்று ஆங்குள்ள கடவுள்களைத் தரிசித்தலும் ஒன்று. இங்ஙனமாய் ஸ்தலங்களில் மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம், ஸ்தல விசேடம் என்று மூவகையான விசேடங்கள் உண்டென்றும் ஒவ்வொரு ஸ்தலங்களில் ஒவ்வொரு விசேடம் சிறந்ததாகவிருக்குமென்றும் புராணிகாகள் கூறுவதுண்டு.

இங்ஙனங்கூறப்படும் ஸ்தல விசேடத்தைக் கூறவந்த புராணிகர்கள் தங்கள் புதியால் எவ்வளவு பொய் சொல்லக்கூடுமோ அவ்வளவுங்கூறியே விடுவார்கள். எவ்வாறெனில் யதாவது ஒரு தலத்தைப்பற்றி பாட நினைத்தால் அதுவே உலகில் சிறந்தென்பார்கள் உதாரணமாக அருணையைப்பற்றி கூறும்போது

அருணாசலப் புராணத்தில்,

"சத்தபுரியே முதலெடுத்ததலம்யாவுமொரு
தட்டுமொரு தட்டதனிலே,
அத்தலமுமிட்டெதிர்நிறுக்சவனைகட்கதிக
மான தொளிரந்த நகரம்,....."

(திருநகரச் சருக்கம் 26)

(இ—ள்) அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகையாகிய ஏழு தலங்களையும் ஏனைய தலங்களையும் தலாக்கோவின் ஒரு தட்டிலும், திருவண்ணாமலையை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்க, அண்ணாமலையானது அத் தலங்களைவிட அதிபாரமுடையதாயிருந்தது.

இது சரிதானா என்று காய்தல் உவத்தலின்றி நடுநிலையாக யோசித்துப்பாருங்கள். உலகத்திலுள்ள தலங்களெல்லாவற்றிலும் மேற்கண்ட ஏழுதலங்களுமே சிறந்தனவென்று கூறுகிறார் மற்றொரு புராணக்காரர். திருவண்ணாமலைக்கு வருகின்ற மக்களிடம் எல்லாத்தலங்களினும் இதுவே சிறந்ததென்று கூறி, தனக்குமிகுதியாகப் பொருள் வரும்வழியைச் செய்யவேண்டிய அவசியம் அவ்வூர் கோயிற் பார்ப்பானுக்கு உரியதாகலாம். புராணக்காரருக்கு அவ்வாறு கூறவேண்டிய அவசியமென்ன? அவ்வாறு தராசில் வைத்து நிறுத்துப்பார்ப்பதற்குத் தகுதியானவன் யார்? நான்முகன் நிறுத்ததாகக்கூற்ன் அவருக்கு நிறுக்கவேண்டிவந்த அவசியமென்ன? தலங்களையெல்லாம் யாருக்காவது விற்றுவிடப்போகின்றாரா? தான் படைத்த தலங்களையே அளவுதெரியாது நிறுத்துப்பார்ப்பதானால் அவரைக்கடவுளென்று கூறமுடியுமா? இயற்கைக்கு மாறாக ஆகாயப்புழுகுகளைக் கூறியிருக்கும், இதற்கும், முயற்கொம்பில் ஏறிநின்று ஆகாயத்தாமரை மலரைப்பறித்து ஆமைமயிர்க்கம்பளத்தில் அடக்கம் செய்தான் என்று கூறுதற்கும் ஏதாவது வேறுபாடுண்டா? பார்ப்பனர்கள் தங்கள் தலங்களுக்கு எல்லாமக்களும் ஓடிவரவும், அதனால் தாங்கள் பொருள் அடையவும் செய்த சூழ்ச்சியைப்போன்றே யிருக்கிறது. இதைப்போலவே மதுரையைப்பற்றிய திருவிளையாடற்புராணத்தில்,

"கைத்தலநான்கிரண்டுடைய மலர்க்கடவுள்
மேலொருநாள் கைலையாதி
எத்தலமும் ஒருதுலையிட்டிடத்தலமுமொருதுலையிட்
டிரண்டுந்தூக்கி,
உத்தமமாந்திருவாலவாய் மிகவுங்கனத்ததுகண்
டுலகின்மேலா,
வைத்ததலமிதுவெனறால் இதன் பெருமை
யாவரே வழுத்தற்பாலார்"

(தலவிசேடம்—20)

(இ—ள்) நான்முகன் முன்னொருநாள் கைலை முதலிய எல்லாத் தலங்களையும் தராசின் ஒருதட்டிலும் மதுரையைமற்றொரு

தட்டிலும் வைத்து நிறுக்க, எல்லாத்தலங்களிலும் மதுரையே கனத்தது.....

இந்தப்புராணக்காரர் பெரும்புளுகுபுளுகுகின்றார். நான்முகன் கைலைமலையையும் சேர்த்து நிறுத்துப்பார்ப்பதாகக்கூறுகின்றார். திருவண்ணாமலையின் முடியைக் காணமாட்டாதவாகிய நான்முகன் திருவண்ணாமலை முதலிய தலங்களையெல்லாம் தூக்கி வைத்து தராசில் நிறுக்க முடிந்ததெப்படி?

இதைப்போலவே திருவாரூர்த்தலபுராணக்காரர்,

"தரையிலூரனைத்துமொரு பெருந்தட்டில்
தன்தொரு தட்டினில் கமலா,

புரியெனும் பதிதன்தரனருளதனால்
நிறுப்பவப் பொன்னகர்

கனத்தில், ஒரு பதினாறுபங்கில் ஒன்றேனும்
உலகிலூரனைத்தும் நின்றில....."

(இ—ள்) பூமியிலுள்ள எல்லா நகரங்களையும் திருவாரூரையும் ஒவ்வொரு தட்டில் வைத்து நிறுக்க, திருவாரூரின் கனத்தில் பதினாறில் ஒருபங்குகூட மற்ற தலங்கள் இல்லை.

திருவாரூர் புராணக்காரர் கைலாயத்தை நீக்கி ஏனைய தலங்களையே வைத்துக்கொண்டார் ஆயினும் மற்றவர்களை விடக் குறைந்தவரல்ல. பூமியிலுள்ள நகரத்தையெல்லாம் எடுத்துக்கொள்கிறார்.

மற்ற இரண்டு புராணக்காரரும் தங்கள் தங்கள் தலம் கனமாகவே யிருந்ததென்கின்றார். திருவாரூர்க்காரரோ எல்லா ஊரும் சேர்ந்து மாகாணிப்பங்குகூட இல்லையென்று ஒரேயடியாக அடித்துவிட்டார். இவைகளில் கவனிக்கவேண்டிய தென்னவென்றால் திருவண்ணாமலையை நிறுக்கும்போது எதிர்த்தட்டில் மதுரை திருவாரூர் எல்லாம் சேர்ந்துதானிருக்கின்றன. அப்படியே திருவாரூரை எடைபோடும்போது மதுரை திருவண்ணாமலை முதலிய தலங்கள் எதிர்த்தட்டில் இருந்திருக்கின்றன. எடையளவு எப்படித் தெரிந்ததென்பது காணவேண்டும். இதற்குப்புராணங்கள் எல்லாம் சத்தியம்; கடவுள்வாக்கு; அவற்றில் பொய்யே கிடையாதென்று கூறும் அறிஞர்கள் பதில் கூறுவார்களாக. 'தடுத்துப் பேசுவதற்கு ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம்' என்று

கூறுவதைப்போல, கேட்பார் ஒருவருமில்லையென்று மனம்போ னவாறு கதை கட்டிவிட்டனர் என்பது மட்டும்நிச்சயம். அல்லவா?

இனி எனைய தலங்களுக்கும் திருவண்ணாமலைக்கும் உள்ள வேறுபாடுகள் பின் வருஞ்செய்யுட்களால் கூறப்படுகின்றன.

"தில்லையைக்காணக் காசியிலிறக்கச்
சிறக்குமாலூர் தனிற்பிறக்க,
எல்லையில் பெருமை யருணையை நினைக்க
எய்தலாம் முத்தியென்றுரைத்தீர்,
ஒல்லையில் நான்கு தலங்களுந்தம்மில்
ஒக்குமென்றுரைத்திடாதடி கேள்,
அல்லி சூழருணையதிகமென்றுரைத்த
கருளென அருள் செய்வானவனும்"

[திருநகரச்சருக்கம்-45]

[இ-ள்] சிதம்பரத்தைக்காணுதல், காசியில் இறத்தல், ஆரூரில் பிறத்தல், அண்ணாமலையை நினைத்தல் ஆகிய செயல்களினால் முத்தி கிடைக்குமென்றுரைத்தீர். இந் நான்கு தலத்தையும் சமமென்று கூறாது அருணையை உயர்த்திக் கூறினதென்னவென்று புராணங்கேட்பவர் வினாவ, புராணங் கூறுகின்றவர் சொல்லுகிறார்.

"இறந்திடுதொழிலும் பிறந்திடுந்தொழிலும்
எண்ணியபடியவை முடியா,
பறந்திடுமவைக்கும் சிலவிலங்கினுக்கும்
பாதப முதவுவோருயிர்க்கும்
நிறைந்த புன் நீசரந்தகர்தமக்கும்
நிருத்தமண்டபஞ் தொழ நேரா
தறந்திகழ்பயனார் சிலர் சிலர்க்கெளிதாம்
அல்லவர்க்கரியதாமதுவே".

(கை சருக்கம்-43)

(இ—ள்) இறப்பதும் பிறப்பதும் நினைத்ததலத்திற் செய்ய முடியாது. பறவை, மிருகம், தாவரம், நீசர், குருடர் ஆகியவர்கள் ஆலயத்துள்ளே வந்து தரிசனஞ்செய்ய முடியாதபடியால் சிலருக்கு மாத்திரமே மற்ற தலங்கள் முத்தியளிக்கத்தக்கனவாயிருக்கின்றன.

"குண்டகர்பதிதர் கோளகர் புலையர்
கொலைபின ருறுப்பிணிற்துறைந்தோர்,
கண்டக நெடுந்தூரத்தினிலிருப்போர்
கருணை சேரருணைபூகரத்தை,
எண்டகவொருகால் நினைத்திட முத்தி
இவரலால் வில்லுந் புண்மரங்கள்,
முண்டக முதலாயினவு முன்காண
முனைத்திட முத்தியே பெறுமால்"

(வேடு சருக்கம்—17)

(இ—ள்) குண்—கர் முதலிய தாழ்ந்தவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், போகமுடியாமல் நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்கும் ஒருதரம் நினைத்தால் முத்தியுண்டாகும். பறவை மிருகம் முதலியன அங்கு சென்றாலும், மரம், செடி, கொடிகள் அங்கு முளைத்தாலும் முத்தியடையும் (ஆதலால் இதலம் எல்லாத் தலத்தினுஞ்சிறந்தது.)

இதற்குப் போட்டியாகத் திருவிளையாடற் புராணத்திற் கூறியிருப்பதாவது:—

".....அவற்றீறிலாத,
சைவதலமதிகமவற்றறுபத்தெட்டதிகமவை
தமிலீரொட்டுத்
தெய்வதலம் அதிகம் அவற்றதிக தலநான்
கவற்றைச் செப்பக்கேண்மின்"

(தலவிசேடம்—3)

(இ—ள்) அழிவில்லாத சைவதலங்கள் சிறந்தன அவற்றுள் அறுபத்தெட்டு தலங்கள் சிறந்தன. அவற்றும் தெய்வீகம் பொருந்திய பதினாறு தலங்கள் சிறந்தன. அவற்றுள் நான்கு சிறந்தன.

"அன்னமலிவயற்புலியூர் காசிநகர் காளத்தி
ஆலவாயாம்,
இன்னவளம் பதிநான்கில் திருவாலவாயதிகம்,
எவ்வாறென்னில்,
மின்னிர் அம்பலங்காணக் காசிநகர் வதிந்திறக்க
வியன் காளத்தி,
பொன்னகரம் பச்தியினால் வழிபாடு செயவளிக்கும்,
போகம் வீடு"

(வி—4)

"அறந்தழையும் திருவாலவாய் கேட்டவுடன் போகம்,
அளிக்கும் மீண்டு,
பிறந்திறவாப்பேரின்பக்கதியளிக்கும் இதுவன்றிப்,
பிறழாதெங்கும்,
நிறைந்த பரன் எத்தலமும் படைப்பான் இத்தலத்தை
மூதனிருமித்தங் தங்கண்
உறைந்தருளினானன்றி இன்னமுளதகன் பெருமை
உரைப்பங்கேண்மின்"

[இ—ள்] சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை முதலிய தலங்கள், தரிசித்தல். இறத்தல், பத்தியினால் வழிபாடு செய்தல் என்வனவாகிய காரியங்களால் இருமையின்பங்களையும் கல்குகின்றன. மதுரையானது தன் பெயரைக் கேட்ட அளவிலேயே இருமையின் பத்தையும் முததியையும் அளிக்கின்றது. ஆகையால் எல்லாத் தலங்களினும் இது சிறந்தது. அன்றியும் பரமசிவன் முதலில் இந் நகரத்தை யுண்டாக்கி இதிலிருந்துகொண்டுதான் எல்லாவுலகத்தையும் படைத்தனன் இன்னுமிதன் பெருமை பல உண்டு.

அருணாசல புராணத்தில் சிதம்பரம், காசி, திருவாரூர், திருவண்ணாமலை ஆகிய நான்கு நகரம் முத்தி கொடுக்கக்கூடியவை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மதுரை சேர்க்கப்படவில்லை. ஆனால் மதுரை திருவிளையாடற் புராணத்தில் சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை ஆகிய நான்கு ஊர்கள் முத்தி நகரமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. திருவண்ணாமலையும், திருவாரூரும் ஒழிக்கப்படடு அவற்றுக்குப் பதில் மதுரையும், காளத்தியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன திருவண்ணாமலை நினைக்க முத்தியளிக்கும் மதுரையின் பேர் கேட்க முத்தியென்று எழுதப்பட்டிருக்கின்றது. இன்னொரு வேடிக்கையான பெருமையும் மதுரைக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லாச் சிவ தலங்களையும் உண்டாகுவதற்குத் தட்டம் போட்டுக்கொண்டு மதுரை நகரத்தை முதலில் உண்டாக்கிப் பரமசிவன் அதிலே வந்து உட்கார்ந்து கொண்டு மற்ற தலங்களையுண்டாக்கினார் என்று எழுதியிருப்பதைக் காட்டிலும் வேடிக்கை வேறொன்று வேண்டியதில்லை. திருவண்ணாமலைக்காரர் மதுரையென்று ஒரு தலமிருக்கிறதென்றும், அதன் பெருமை திருவண்ணாமலைக்குக் காணாதென்றும் நகரச் சருக்கத்தில் சொல்லுகிறார். ஆனால் மதுரைக்காரரோ அண்ணாமலையை அநாமதேயப் பட்டியலில் போட்டிருக்கிறார்.

இனி திருவாரூர்ப் புராணத்தில் அந்த ஊர்ப்பெருமையை,

"தேசுசால் உலகின் மேலாம் சிவதலம்பல அவற்றுள்,
ஆசுதீர் காசி மேன்மையடைந்துளதகனின்சால,
எசுலா மேன்மை பெற்றதாரூரொன்றெடுத்துரைக்கும்,
மாசுதீர் தொன்மைசான்ற மறைமுதல் நூல்களெல்லாம்."

(தலமகிமை—18)

"இந்த மாநகர்க்கு மேலாம் நகரமும் ஈறில் செல்வத்,
திந்தமா நகரமொத்த நகரமும் எறிநீர் சூழ்ந்த,'
இந்த மாநிலத்திலில்லை இணை இதற்கிஃதேயாதும்....."

(ஷை—77)

(இ—ள்) எல்லாத் தலங்களிலும் காசி சிறந்தகென்றும், அதனிலுஞ் சிறந்தது திருவாரூரென்றும் வேத முதலிய நூல்களெல்லாம் கூறும். இந்நகரத்திற்கு மேலான நகரமும் ஒப்பான நகரமும் கிடையாது. இதற்கிதுவே இணையாகும் என்று கூறுகிறார்.

இவர் ஓரேயடியாக அடிக்கிறார். வேத முதலிய நூல்களெல்லாம் திருவாரூர் சிறந்தகென்று கூறுவதாக எழுதிவிட்டார். அந்த நூல்களுள் திருவிளையாடலும் அருணாசலப் புராணமும் சேர்ந்திருந்தால், எல்லா நூல்களும் திருவாரூரைத் தலைசிறந்தகென்று கூறுவதாக இவர் செல்லுவது முழுதும் முரண்பாடாக இருக்கின்றதே? காசி சிறந்தகென்றும் ஆனால் தங்கள் தலத்திற்கு அது தாழ்ந்தகென்றும் மூன்று புராணக்காரரும் எழுதிவிட்டார்கள். இதற்குக் காரணம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள பார்ப்பனர்கள் சோம்பேறிகளை வயிறுபிழைப்புகாகப் புராணங்களைக் கண்டவாறு பாடி, மிகுதியான பொய்களை எற்றி, பாமர மக்களை மயங்கச் செய்து காசு பறிக்கும் செய்கையன்றி வேறொன்றுமில்லை யெனபது வெளிப்படை. அன்றியும் இப்புராணங்களையெல்லாம் ஓரே முனிவர் கூறினதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று முரணாக ஒருவரே இவ்வாறு கூறுவாரா? புராணக்காரர்கள் தாங்களே இவ்வாறு கூறிக்கொண்டார்களா? புராணங்களெல்லாம் உண்மை; பொய்யென்று புகலக்கூடாதென்டவர்கள் இக்கட்டுரையைப் பன்முறை படித்து தக்க விடைகள கூறுவாராக.

"ஆதித்தன்"

சரசாவின் சமர்த்து.

(ஜே. பி. கிருஷ்ணன்)

(1)

"நான்கூடத்தான் சொன்னேன், வயசானபெண்ணைநாலு புருஷா னோடு பழக விட வேண்டாமென்று, கேட்டேளா? பட்டாள்தானே தெரி யும்!" என்றாள் லட்சுமியம்மாள் தன் பர்த்தாவை நோக்கி.

"ஆமாண்டி! இப்போ என்ன முழுகி விட்டது? கூட்டங்களுக்கும், மகாநாடுகளுக்கும் போவதால் ஒன்றும் கெட்டுப்போகாது. என்னமோ குழந்தை அவன் மேல் ஆசைப்படுகிறது! அதுக்காக அதன் இஷ்டம் போலக் கல்யாணம் பண்ணிவிடப் போகிறோமா என்ன? இத்தனை வயசு வரையில் குழந்தையை சும்மா வைத்திருந்ததே தவறு. என்ன செய்வது நமது கஷ்ட காலம்" என்றார் சலிப்போடு சங்காய்யர்.

"அந்தத் தவறு இருக்கட்டும். நீங்கள்தானே மேடைப் பிரசங்கத் திலே கதறுகிறீர்கள், காதல் மணம், கலப்பு மணமென்று. அது குழந் தை மனதில் நன்றாகப் பதிந்து விட்டது"

"அடி! அதெல்லாம் வெறும் பிரசங்கம், அப்படியே நடக்க வேணு மென்றால் யாராலாகும்? சாதி வேற்றுமை தொலைய வேண்டுமென்று தான் சொல்லுகிறேன். அதனாலேயே அந்த சூத்திரப்பயலுக்கு நமது பெண்ணைக் கொடுத்துவிட வேண்டியதுதானா?"

"இது நல்ல நியாயம்! சொல்வதொன்று, செய்வதொன்றா? ரொம்ப ஒழுங்குதான்! இதுதான் உங்கள் காங்கிரஸ் கட்டளையாக்கும்! போகட் டும், குழந்தை ஒரே பிடிவாதம் பிடித்தால் என்ன செய்வீர்கள்? அறியாக் குழந்தையா ஏமாற்றுவதற்கு? அதன் இஷ்டம் போலத்தானே செய்தாக வேண்டும்? காதலர் தம் கருத்தொருமித்து ஆதரவு பட்டதன்றோ இன் பம்!"

"அடி! போதும் உன் வேதாந்தம்! நேற்றுக்கூட கடிதமெழுதியிருக் கிறார் சுப்பய்யர். அடுத்த மாசத்துக்குள் ரூபாய் 7000-த்தையும், வட்டி யோடு கணக்குத் தீர்க்க வேண்டுமாம். இல்லாவிட்டால் சரசாவை அவ ருக்குத் "தார"மாக்கி, கணக்கைக் பைசல் செய்துக்கொள்ளலாமாம். இரண்டிலொன்று செய்யாவிட்டால் நமது குடும்ப கௌரவமே போய் விடும்!"

"சரி! எதைச் செய்வதாக உத்தேசம்? குழந்தையைக் கொடுக்கப் போகிறீர்களா? அவருக்கு?"

"அதைத்தான் யோசிக்கிறேன், இந்தக் காலத்தில் பணம் கிடைப்பதோ முயற்கொம்பு! இரண்டாந்தாரமாயிந்தாலும் பரவாயில்லையென்று, பேசாமல் குழந்தையை அவருக்கே கட்டிக்கொடுப்பதுதான் நல்ல வழி! குழந்தையாவது பணக்காரன் வீட்டில் வாழ்க்கைப்பட்டு நன்றாய்ப் பிழைத்தால் அதுவே நமக்குப் பெருமை. அந்தமாதிரி பெரிய சம்மந்தம் கிடைப்பதென்றால் சாமானயமா?"

"இந்தப் பசப்புகளெல்லாம் ஏன்? நம்ம சரசாவை அந்தக் கிழவருக்கு விற்கப்போகிறேனென்று சொல்லுங்களேன்! ஐயோ! உங்கள் மனசு எப்படித்தான் துணிந்ததோ தெரியவில்லையே! வேண்டாம். படிச்சபிள்ளை. நன்னாப் பிழைக்கணும், அந்தக் கிழவனிடம் தள்ளி வீணாகக் கெடுக்கவேண்டாம், அதை நினைத்தாலே என் வயிறு பற்றுகிறது!"

"ச்சீ! அசடே! வாயை மூடு! நீ ரொம்பத் தெரிந்தவள்தான். பெண் புத்தி பின் புத்தி என்பது சரியாயிருக்கிறது" என்றார் முடிவாக சங்கரய்யர். கோபத்தால் அவர் முகம் சிவந்தது!

இனியும் அதை மறுத்துப் பேச லட்சுமியம்மாளுக்கு உரிமையில்லை! அவள் ஒரு இந்து மனைவி! சுதந்திரமற்ற மனித உரு!

(2)

மனதைக் கவரும் மாலை வேளை, இனிமையான தென்றல் "சிலு சிலு"வென்று வீசியது. கதிரவன் மஞ்சள் முகம் காட்டி உலகை மயக்கினான்! காதலர்கள் மனத்தில் புதிய புதிய எண்ணங்களைத் தோற்றுவிக்கும் அந்திப்பொழுது!

இயற்கையோடு லயித்துப்போய் சிந்தாக்கிரந்தையாய் வீற்றிருந்தாள் சரசா. தனது தோட்களின் மீது ஏதோ பட்டதைப் போன்ற உணர்ச்சி! திடுக்கிட்டுத் திரும்பினாள். சுந்தரநாதனைக் கண்டதும் பொருக்கென எழுந்து நின்றாள். அவள் முகம் மலர்ந்தது. உடல் பூரித்தது. அளவற்ற சோபையுடன் கூடிய ஒரு புன்னகை!

ஏது இந்த வேளையில்? தனித்திருக்கும் யுவதிகளை, வாலிபர்கள் சந்திக்கவராகாதென்பீர்களே! என்றாள் பொங்கியெழுந்த குதூகலத்தோடு சரசா.

ஆமாம்! நீயட்டும் தனியாகவா இருக்கிறாய்? நானில்லையா? என்றான் அர்த்தத்தோடு சுந்தரநாதன்.

"அப்படியா! சந்தோஷம்! எனது தனிமையைப் பூர்த்தி செய்ய வந்தீர்கள் போலும்! அப்படியானால் நான் "தனிமை" என்ற வார்த்தையை உச்சரித்ததே தப்பு. மன்னிக்க வேண்டும்"

"சரசு! உன்னை இன்று மன்னிக்க முடியாது."

எத்தனைநாளைக்கு இந்த ஏமாற்றுப்பேச்சு! நான் வருந்துவது உனக்குச்சம்மதமா? இது தருமமா? இனிமுடியாது. இன்னும் சிலநாட்களுக்குள் என்னை ஏற்றுக்கொண்டாலாச்சு, இல்லாவிடில்....."

சுந்தரநாதன் கண்கள் கலங்கியது. முகம் இருண்டது! "அன்பே! இதென்ன புதுமை! வேண்டாம்!"

ஆதரவோடு சுந்தரநாதனைத் தாவியணைத்துத் தன் கரங்களால் அன்பாக அவன் வாயைப் பொத்தினாள் சரசா.

இரு உள்ளத்திலும் பொங்கியெழுந்தது இன்ப வெள்ளம்! ஜீவ வேகத்தோடு கூடிய ஒரு அணைப்பு. அன்பு கனிந்த பல முத்தங்கள்! இன்ப வெறியின் மழலைப் பேச்சுகள்!

காதலர்களின் களியாட்டத்தை அதிகமாக வருணிக்க வேண்டாம். கோயிலுக்குப் போயிருக்கும் பெற்றோர்களின் ஞாபகம் வந்த பின்னர் தான், சரசா சுந்தரநாதனிடமிருந்து தன்னை மீட்டுக்கொண்டாள். இருவரும் பிரிந்தனர். சும்மாவல்ல, தங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கு ஏற்றதான ஒரு "ரகசியத் திட்டம்" வகுத்து, அதன்படிச் செய்தேதீரவேண்டும் என்ற உறுதியோடுதான் பிரிந்தனர். அவர்கள் துணிந்து விட்டார்கள்! சாதி முறையை உடைப்பதும், பணக்கொழுப்புக்குப் பாடம் கற்பிப்பதுந் தான் அவர்களது தேசத்தொண்டின் முதல் அத்தியாயம்!

(3)

பலகாளாக விளம்பரம் செய்துவந்த, முசிரி தாலூக்கா காங்கிரஸ் அரசியல் மகாநாடு ஆரம்பமாயிற்று. சிறந்த தேசபக்தரெனக்கருதப்படும் தோழர் சங்கரய்யரே மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

பெண்கள் மகாநாட்டுக்குத்தோழியர் சரசாம்பிகை அம்மையாரைத் தலைவியாகவும், தோழர் சுந்தரநாதனை திறப்பாளராகவும் அழைக்கப் பட்டிருந்தனர்.

இங்கு, நமது சங்கரய்யருக்குக்கடன் கொடுத்துள்ள சுப்பய்யரின் சொந்தவூர் முசிரிதான் என்பதை வாசகர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

மகாநாடு வெகு ஆடம்பரமாக நடைபெற்றது. வழக்கம்போல் ஜஸ்டிஸ், சுயமரியாதைக்கட்சிகளைத் தூற்றும் சேவைக்குக் குறைச்சலில்லை. பெண்கள் மகாநாட்டிற்குச்சுப்பய்யரும் விஜயம் செய்திருந்தார். சரசாவின் பேச்சுத்திறமையைக் கண்டு வியந்தார். அவளது பரிபூரண அழகைக்கண்டு வாயைப்பிளந்து அப்படியே உட்கார்ந்து விட்டார். இப்பேர்ழகி தனக்கு மனைவியாக வாய்க்கப்போகிறாளே, என்பதை எண்ணும்போது அவரது உடல் பூரித்தது. ஆசை கட்டுக்கடங்காமல் மீறியது! மோகப்பித்தால் மூச்சுத்திணறியது! இந்த நிலைமையில் சரசாவின் ஆவேசமான பெண்ணுரிமைப்பிரசங்கம் அவர் காதில் நுழைந்திருக்குமென்று நாம் நம்புவதற்கில்லை.

மகாநாடும் முடிந்தது. தோழர் சுப்பய்யரின் பிரியத்தின்படி அன்றிரவு, சங்கரய்யர், சுந்தரநாதன், சரசா மூவரும் அவரது வீட்டிலேயே விருந்தினராகத் தங்கினர். சுப்பய்யர் ஒரு வாலிபனைப்போன்று ஓடியாடி வெகு உற்சாகமாக அவர்களை உபசரித்தார். சரசாவின் முன்பு தன்னை ஒரு வாலிபனாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்பதே அவரது எண்ணம். ஆனால் அவரது பொல்லாததொந்தியும், தொப்பையும், குழிந்த கண்களும், "மணிபர்ஸ்" வாயும், இன்னும் பலவும் அவரைக்கிழவன் கிழவன் என்று விளம்பரப்படுத்திக் கொண்டே இருந்தன! பாவம்! அவர் தான் என்ன செய்வார்? மூதுமையின் கோளாறு! ஆயினும் ஆசைப்பேய்க்கு அடிமையாய் விட்டார்.

"தந்தையின் சம்மதமிருக்கும்போது நமக்கென்ன பயம்"? எப்படியாவது சரசாவை அன்றிரவே அனுபவித்து விடவேண்டும். என்று தீர்மானித்தார் சுப்பய்யர். அந்த நோக்கத்தோடு சரசாவுக்கு ஒரு தனிப்படுக்கை விடப்பட்டது.

தங்கள் திட்டத்திற்கு அனுகூலமாக காரியங்கள் நடப்பதைக்குறித்து சரசாவுக்கும், சுந்தரநாதனுக்கும் மிகுந்த சந்தோஷம்! வெறியின் மேலேகண்! தன்மகள் சுப்பய்யரின் இவ்விடத்திற்கு இணங்கி விடுவாள் தன் கடனும் தீர்ந்துவிடும், என்பதைக்குறித்து தேசபக்த சிகாமணி சங்கரய்யருக்கு ஒரு சந்தோஷம்! "தான் பெற்ற மகள் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு குட்டிச்சுவராய்ப்போனாலும், பணம் வந்தால் போதும்" என்ற சுயநல ஆக்ரமிப்பின் முழுப்பயன்! தன்னல சொரூபம்!

(4)

கள்ளிரவு. சந்திரிகையின் பூரண ஆட்சி! எங்கும் பால் போன்ற நிலவு காய்ந்தது.

திடுக்கிட்டு விழித்துக்கொண்ட சரசா சுற்றுமுற்றும் பார்த்தாள். தலைமாட்டில் தொந்தியைத்தடவிக்கொண்டு சுப்பய்யர் நின்றுகொண்டி

ருப்பதைக்கண்டாள். பொருக்கென எழுந்து ஒதுங்கி நின்றாள். அச்சம், உறுதி, நாணம், புன்னகை எல்லாம் ஒருங்கே அவள் முகத்திலே பொலிந்தது! சாளரத்தின் வழியாகப் பாய்ந்த நிலவு அவள் வதனத்திலே தவழ்ந்தது. முகத்திற்கே ஒரு புதிய ஒளியைக்கொடுத்தது! அழகுக்கு அழகு செய்தது.

"சரசா! எ...ன்...னை...ம...ன்...னி...க்...க...வே...ண்...டு...ம்" என்று இழுத்தார் சுப்பய்யர். பற்களைக்காட்டிக்கெஞ்சும் தோரணையில்.

"உங்களையா? நானென் மன்னிக்கவேண்டும்? என்ன குற்றம் செய்தீர்கள்?" என்றாள் மூடுக்காக சரசா.

"இல்லை.....ஒரு வயசுப்பெண்ணான உன்னை.....தனி அறையில் சந்தித்ததைப்பற்றி.....ஒருவேளை.....குற்றமாக....."

"ஓ! ஓ! இது அவ்வளவு பெரிய குற்றமா என்ன? அப்படித்தானிருந்தாலும் வேறு யாரிடம் வித்தியாசமாக நடந்து கொள்ளுகிறீர்கள்? கூடிய சீக்கிரம் தங்களுக்கு மனைவியாகும் பாக்கியம் பெற்ற அடியாளிடந்தானே! இதிலென்ன தோஷம்?"

சுப்பய்யருக்கு உற்சாகமும், தைரியமும் பிறந்து விட்டது, அவர் முகத்திலே நம்பிக்கைக்கலந்த ஒரு சந்தோஷம்! தேன்குடித்த நரியாகி விட்டார்.

பேஷ்! பேஷ்!! தெரிந்துக்கொண்டாயே! சரசா! நீயே தீர்க்கதரிசி! என்மனதுக்கேற்ற கற்புக்கரசி! சாதற்கடவுள்! ஐயோ! உன்பாதம் நோகுமே! வா இப்படி உட்காருவோம்" என்று சொல்லிக்கொண்டே சரசாவின் மெல்லிய கரங்களைப்பற்றினார். அவரது தேகத்தில் "குபீ"லென்று, மின்சாரத்தைப்போன்று தாக்கியது ஒரு இன்ப உணர்ச்சி! காமக்கிழுக்கு தலைக்கேறித்தள்ளாடினார்! அந்நிலையில் சரசாவின் ஒருமுத்தத்திற்கு ஒரு லட்ச ரூபாயென்றாலும் அய்யர் ரெடி! அவ்வளவு மோக உணர்ச்சி!

இருவரும் ஒரு சோபாவில் அமர்ந்தார்கள். கிழவர் மிகுந்த ஆர்வத்தோடு சரசாவை அணைத்து முத்தமிடப்போனார். சரசா லாவகமாக அவரது பிடியிலிருந்து விலகிக்கொண்டு "கொஞ்சம் பொருங்களேன். ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கக்கூடாதா?" என்றாள் கொஞ்சலாக.

சுப்பய்யர்:—சரசா! என் ஆசை மீறுதேடி! என் அப்படிச்சொல்லுகிறாய்?

சரசா:—வித்தியாசமாக ஒன்றுமில்லை! ஒரு விஷயம். என் தகப்பனார் தங்களிடம் எவ்வளவு தொகை வாங்கினார்; அது எப்பொழுது,

என்பதைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்பது எனது ஆசை! என்தகப்பனார் சொல்ல மாட்டேனென்கிறார். அவ்வளவுதான். அதற்குள்தான் நீங்கள் அவசரப்படுகிறீர்களே!

சுப்பய்யர்;—இதற்குத்தானா? இதென்ன பிரமாதம்! உன் தகப்பனார் எழுதிக்கொடுத்த "பத்திர"த்தையே எடுத்து வருகிறேன் பாரேன்!

சுப்பய்யர் அவசரமாக வேறு ஒரு அறைக்குள் சென்று ஒரு "பத்திர"த்தோடு திரும்பிவந்தார் "பத்திர"த்தை சரசாவிடம் கொடுத்துவிட்டு அவளருகில் நெருங்கி உட்கார்ந்தார், அதைப்படித்துப்பார்த்தாள் சரசா தனது வாழ்வையே கெடுக்கப்பார்ப்பது, இந்த ஒரு அற்பக்காகிதந்தான் என்பதை நினைக்கும்போது அவள் மனம் வெடித்துவிடும்போலாகிவிட்டது! பொங்கி பொங்கியெழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டாள்.

"இதைப் பார்த்து நீ என்ன செய்யப்போகிறாய்?" என்றார் சுப்பய்யர்.

"நானென்ன செய்வது? நான்தான் தங்களுக்கு மனைவியாகப்போகிறேனே! என் மனசுக்கேற்ற கணவராக நீங்கள் வாய்த்திருக்க எனக்கென்ன குறைச்சல்? ஆனால் ஒன்று தங்கள் காதலி கடன்காரன் மகளாயிருப்பது உங்களுக்கு அவமானமல்லவா? அதற்குத்தான் யோசனை அதை நீங்கள் இப்போதே நிவர்த்திசெய்துவிட்டால் தேவலை. என் மனசும் சந்தோஷமாக உங்களை ஏற்றுக்கொள்ளும்" என்றாள் சரசா கொஞ்சிகொண்டு.

போடு தோப்புக்கரணம் என்றால் எண்ணிக்கொள், என்ற நிலைமையிலிருக்கும் சுப்பய்யர் சரசாவின் ஆசையைப்பூர்த்திசெய்யத் தயங்குவாரா? சங்கரய்யருக்குக் கடனாகத்தந்த ரூபாய் 7000-மும் இழக்கத்துணிந்தார். தன் கையாலேயே அந்தப் "பத்தி"ரத்தில் ரூபாய்கள் பூராவும் செலுத்தப்பட்டுவிட்டதாகச் செல்லெழுதிக்கொடுத்துவிட்டார்.

சரசாவின் ஒரு சிறிய கட்டளையைக்கூட மறுக்கத்துணியவில்லை சுப்பய்யர், ஏனெனில் அவள் பிரியம்போலவெல்லாம் நடந்து, அவளது அன்பைப்பெற்றுவிடவேண்டுமென்பது அந்தரங்க நோக்கம். சரசா ஏதேதோ சாக்குப்போக்குகளைச்சொல்லி, எல்லாம் பின்னர் பேசிக்கொள்ளலாம், என்று நயமாக அவரை வெளியில் அனுப்பிவிட்டாள். கழுத்தில் கயிறு ஏறினால்தான் குட்டி வசப்படும் என்று எண்ணிக்கொண்டு "பெருமாள்மாடு" மாதிரி தன்னறைக்குச் சென்றார் சுப்பய்யர் அன்றிரவு அவரது "மோகம்" வீட்டு வேலைக்காரிமீது பாய்ந்தது! விடுபட்ட கணைக்கு லட்சியம் வேண்டுமல்லவா? அதுதான் அது!

(5)

சங்கரய்யர் வீட்டில், லட்சுமியம்மாளும், சங்கரய்யரும் கூட்டத்தில் வீற்றிருந்தனர்.

கடன் தீர்ந்துவிட்டதே இன்னுங்கூட அந்தக்கிழட்டுப்பிணத்துக்கே தான் குழந்தையை பலிகொடுக்கணுமோ?" என்றாள் லட்சுமியம்மாள்.

"ஏண்டி! இது ரொம்ப அழகுதான்! வெளிக்குத் தெரிஞ்சால் நாலு பேர் சிரிக்கமாட்டார்களா? நம்பிக்கைத்துரோகமல்லவா? பாவம்! மூகூர்த்த நாள் பார்க்கச்சொல்லி இதற்குள் நாலுகடுதாசி எழுதிவிட்டாரே சுப்பய்யர்!" என்றார் சங்கரய்யர்.

"போதும்! உங்கள் காந்தி எழை ஆதித்திராவிட மக்களை முன்னேற்றப்போகிறேனென்று பணத்தைச் சேர்த்து, எலக்ஷன் செலவுக்குக் கொடுத்துவிட்டு, மூலையில் பதுங்கிவிட்டாரே! அதைவிட இது பெரிய துரோகமா என்ன? கிழட்டுக்கட்டைகளுக்கு இந்த வகையிலாவது புத்தி வரட்டுமே! இதை வெளியில் சொன்னால் யாருக்கு அவமானம்? அவருக்குக்கலியாணமிருக்கட்டும், கருமாதிக்குநாள் குறித்து அனுப்புங்கள்!" என்றாள் லட்சுமியம்மாள் குறும்பாக.

"போதும் நிறுத்தடி! தலைச்சனியன்! வீணாகச் சரசாவை நீயே கெடுத்துவிடுவாய்போலிருக்கிறது; அநியா....."

அவர் பேச்சு முடியுமுன்னர்,

"அப்பா! என்னை யாராலும் கெடுக்க முடியாது, அந்த வருத்தம் உங்களுக்குவேண்டாம்." என்று சொல்லிக்கொண்டே சரசா அங்குத்தோன்றினாள். அய்யர் திடுக்கிட்டுவிட்டார்.

எத்தனைநாளைக்குத்தான் மனதிலேயே வைத்துக்கொண்டிருப்பது சரசா அன்றைக்குத்தான் தன் மனதைவிட்டுச் சொன்னாள். "யார் வந்து தடுத்தாலும், எத்தனை சாதிகள், சாஸ்திரங்கள், கட்டுப்பாடுகள், மூட்டுக்கட்டைபோட்டாலும், தான் சுந்தரநாதனை மணந்தே தீருவது, இல்லையேல் மடிவது, நிச்சயமாக இரண்டில் ஒன்றுதான்!" என்றாள்.

அய்யர் பிரமித்தார்! இவளுக்கு இத்தனை தைரியம் எங்கிருந்து வந்தது? "இந்தச் சூத்திரப்பயல்கள்!" பல்லைக்கடித்துக்கொண்டார்! சுந்தரநாதன் மட்டும் எதிரிலிருந்தால் "பஸ்மீகரம்" செய்திருப்பார்! என்ன வந்தபோதிலும் சரி! "இந்தக்காயம் உயிரோடிருக்கும் வரையில் அப்படி நடக்க விடமாட்டேன்" என்று உறுதியாகவும், கண்டிப்பாகவும் சொல்லிவிட்டார், அதற்கு "அப்பீல்" கிடையாது,

ஆயினும் சரசா இதற்கெல்லாம் அஞ்சுபவளல்ல. எதிர்பார்த்ததுதான்! எந்தக் காரியத்திலும் துணிச்சல், தைரியம், ஆதரவுமட்டுமிருந்தால் "சாதனை" மிகச் சுலபம்.

சுந்தரநாதனும், சரசாவும் தங்கள்பிதுரார்ஜ்ஜிதமான கோழைத்தனத்தைதெரம்ப நாளைக்கு முன்பே மூட்டைகட்டி வைத்துவிட்டார்கள். பெற்றோர்கள், உறவினர்கள், தோழர்கள் என்ன நினைப்பார்கள்! என்ன சொல்லுவார்கள்! என்பதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது, என்பதை அவர்கள் அறிந்துவிட்டனர்! கரை உடைபட்ட காட்டு வெள்ளம் போலப்பாய்ந்தது அவர்களது உணர்ச்சியின் வேகம்! அதன் முன் "சாதிக்கட்டு" என்ற "பொய்யணை" எந்த மூலை!?

(6)

அன்று ஊரெங்கும் இதே பேச்சுத்தான். சரசாவும், சுந்தரநாதனும் வீட்டில் இல்லை, அவர்கள் போனவிடம் யாருக்கும் தெரியாது. திண்ணைத்தூங்கி சோம்பேறிகளுக்கும், வைதீகமடி சஞ்சிகளுக்கும், அடுப்பங்கூர அம்மாமிகளுக்கும், நல்ல வேட்டை! வெறும் வாயை மெல்லுவோருக்கு ஒரு "கை" அவல் கிடைத்துவிட்டால் சொல்லவும் வேண்டுமா?

பற்பலவித ஜோஸ்யங்களும், அபிப்பிராயங்களும், பேச்சுக்களும், ஊருக்குள் நடனமாடின! பிள்ளையைப்பெற்றவர்கள் மனசு எப்படித்தானிருக்கும்? ஒரே குழப்பந்தான்!

'ஒரு பிரபல சுயமரியாதைச் சங்கத்தின் சார்பிலே, சரசாம்பிகை—சுந்தரநாதன் திருமணம் நடைபெற்றது. கலியாணம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, சிக்கனமாகவும், சிறப்பாகவும் நடந்ததென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. வாழ்த்துச்செய்திகளுக்கும், பாட்டுச்செய்திகளுக்கும் பஞ்சமில்லை, சிலகாங்கிரஸ் வாலாக்களுங்கூட கலியாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

கலியாணத்தின்போது சுந்தரநாதன் பொழிந்த சொற்பொழிவுதான் ரொம்ப முக்கியம், காங்கிரஸ் தேசியப்போர்வை போர்த்துள்ள வைதீகப்புலிகளுக்கும், பிறரை வகுப்புவாதிகளென்று கேவலப்படுத்திவிட்டு, வகுப்புவாதத்தை வளர்க்கும் ஆரியக்கூத்தர்களுக்கும், சாதிக்கொழுப்பர்களுக்கும் சரியான சாட்டை! காங்கிரஸ்வாலாக்களின்முகம் தொங்கிவிட்டது.

கலியாணச்செய்தி முக்கியமான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதைப்படித்த சங்கரய்யரின் எண்சாண் உடம்பு ஒருசாணாகக் குன்றியது! மனசுக்குள் பெரிய குழப்பம்! வேதனை! லட்சுமியம்மாவின் சந்தோஷப்புன்னகைவேறு அவரது உயிரைக் குடிக்கிறது! என்னதான் செய்வார் பாவம்!

ஆலயமும் திருவிழாவும்.

பண்டைக் காலத்தில் அரசர்களும், தனவந்தர்களும் மிகு தியான பொருள்களைச் செலவுசெய்து ஆலயங்கள் அமைத் திருக்கின்றார்கள். முதன் முதலில் மரத்தாலேயே ஆலயங் கள் ஏற்பட்டிருந்தனவென்றும், அதற்குப் பிற்காலத்தில்தான் கற்களால் கட்டி முடித்தனரென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இவ்வாலயங்களின் வளர்ச்சியின் பொருட் டும், பாதுகாப்பின்பொருட்டும் அனேகமான பொருட்களைப் பலர் அளித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு கோயிலின் போர

சுந்தர நாதனின் பெற்றோர்கள் நிலைமையும் அப்படியே தான் என்றாலும் தங்கள் மகன் உயர்ந்த ஜாதியில் தான் சம்மந்தம் செய்திருக் கிறான் என்ற வகையில் ஒரு திருப்தி! மனச்சாந்தி!

இவர்களெல்லாரையும் விட இன்னொரு பெரிய ஜீவன் இருக்கி றதே! அதுதான் முசிரிக் கிழவர் சுப்பய்யர்வாள்தான்! அவர் இச்செய்தி யைக் கேட்டதும், உண்மையில் நெருப்பில் போட்ட புழுப்போலவே துடித்து விட்டார்! இன்னும் செல்லுபடியாக வேண்டியதன் ஆயுளில் இப்போதே பாதிபாகம் குறைந்து விட்டதைப் போன்ற உணர்ச்சி தட்டி யது! கை கால்களெல்லாம் "வெல வெல"த்து விட்டது. கண் இருண்ட தது! வெளியில் சொன்னால் வெட்கம்! சொல்லாவிட்டால் துக்கம்! கொஞ்சமா? ரூபாய் 7000.....? அதுவும் ஒரு சின்னப் பொம்மனாட்டி யிடம்.....! இது வெளிக்கு வந்தால்.....! லோகத்திலே இதை விட அவமானம்..... அய்யரின் ஆவி சோர்ந்தது! படுக்கையில் சாய்ந்தார்!

"எனக்கு புத்தி வந்தது, கிழவர்கள் குமரிப்பெண்களை மணக்க ஆசைப்படுவதில் பயனில்லை, பணம்!... பணம்!... பணத்தை விட ஒரு பெண் மேலானவள் என்பதைச் சரசா என் நெஞ்சில் உதைத்துக் காண் பித்து விட்டாள்! இந்தத் தழும்பு மறையாது: அழியாது! சரசா நன்றாக வாழட்டும்! வாலிப உலகம் தழைக்கட்டும்! என் போன்ற கிழவர்கள் இனி யாவது புத்திசாலித்தனமாக..... ஆ! சுந்தரநாதனுடைய பாக்கியம்.....? சரசாவின் அழகு.....?" இதைப்போன்ற பல பிணத்தல்கள் அவரது வாயிலிருந்து "தஸ் புஸ்" என்ற சப்தத்தோடு வெளி வந்து கொண்டிருந் தது! ஈனஸ்வரத்தில்!

லும் ஏராளமான கிலங்களும் விடப்பட்டிருக்கிருக்கின்றன. சோழகுலத்தரசனாகிய குலோத்துங்கன் சிதம்பரத்திலுள்ள ஆலயத்திற்குப் பொன்னால் ஓடுகள் செய்து வேய்ந்தானென்றும் அதனால் அவனுக்கு ஓர் சிறப்புப் பெயர் கிடைத்ததென்றும் சாசனங்களுங் கூறுகின்றன.

இங்ஙனமாக ஏற்படுத்தப்பட்ட கோயில்கள் அவசியமா என்று வினாவினால் நியாயமான முறையில் ஆஸ்திகர்களுங் கூட வேண்டியதில்லையென்றுதான் கூறவேண்டியிருக்கும். ஏனெனில் கடவுள் உருவமற்றவர், பெயரற்றவர், இன்ப துன்பம் சேராதவர், இயற்கையாக வினையிலிருந்து நீங்கினவர். இன்னவாறென்று அவர் தன்மையைக் கூறுதற்கு முற்றுமுணர்ந்தவர்களாலும் முடியாதென்று அவரிலக்கணங் கூறியிருக்க, அறிவிற்கும், சிந்தைக்கும், மொழிக்கும் எட்டாத ஒரு பொருளைக் கற்சிலை முதலியவற்றுள் அடங்கினதாகப் பாவித்து வைத்து அச்சிலைகளுக்குப் பல ரூபங்கொடுத்து அதற்காகக் கோவில்கள் வேண்டுமென்று பெரும் பணம் செலவு செய்வதும் மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொழில்கள், போகபோக்கியங்கள் எல்லாமும் கடவுளுக்கும் உண்டென்று எற்றிவைத்துக்கொள்வதும் அறிபாமையல்லவா? ஓர் அறிஞர் கடவுளைப்பற்றிக் கூறுமிடத்து "என்னைத் தோத்திரம் செய்கின்ற பெரியவர்களையெல்லாம் நான் ஒத்தவனாகின்றேன். அது எவ்வாறென்னில் அவர்களும் உனது தன்மையை அறியாமல் தங்களுக்கு முன்னே உள்ளவர்கள் கூறியவாறே கூறியிருக்கின்றனர். யானும் அவ்வாறே எனக்கு முன்னோராகியவர்கள் கூறியவாறே கூறுகின்றேன்" என்று சொல்லியிருக்கின்றார். இங்ஙன மாயக் கடவுளை ஓர் குறிப்பிட்ட உருவத்தில் அமைத்து அதற்கு ஆலயம் அமைத்து வீண் பொருள் செலவு செய்ததும், அக் கோயில்களில் கடவுளின் அருகே பார்ப்பனரன்றிப் பிறர் செல்லக் கூடாதென்பதும், தாழ்த்தப்பட்டார் என்பவர்கள் கோவிலுக்குள்ளேயே நுழையக்கூடாதென்பதும் எவ்வளவு அறிவீனம்?

இவ்விடத்தில் ஓர் பெருத்த சந்தேகம் தோன்றுகிறது. அதாவது கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று கூறியிருத்தலின் தாழ்த்தப்பட்டவர்களுள்ளும் கடவுள் நிறைந்துதானேயிருப்பார், அப்படியிருக்கத் தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்கு வந்தால்மட்டும் தீட்டு எங்கிருந்து வந்துவிடும்? இது நிற்க.

இங்ஙன மாய ஆலயங்களுக்கு மக்கள் சென்று தரிசிக்க வேண்டியது அவசியமாவென்று பார்த்தால் அவசியமில்லை யென்று தோன்றுவதோடு கோவிலுக்குச் செல்லுவதால் பல கெடுதிகளும உண்டாகின்றனவென்பதை யாரே மறுக்க வல்லார்? முதலாவதாகத் தூர தேசம் செல்வதற்கு வீண் செலவும், உடல் நலக் குறையும் உண்டாகின்றன. ஆனால் வேறு தேயங்களையும் அங்குள்ள வளப்பங்களையும் காணுதலும் ஆலயமுள்ள நகரம் சிறந்ததாகவிருப்பின் அதனைக் காணுதலும் அவசியமன்றோவெனில், அவ்வாறு சிறந்த நகராகவும், வளப்பமுடைய தேயமாகவும் அல்லாத சிற்றூரிலும், சுகாதாராக் குறைவான இடங்களிலும் ஆலயங்கள் அமைந்திருத்தலின் அதுவும் பொருந்துவதாயில்லை.

இப்பொழுது கோவில்களுக்குச் சென்றால் அங்குள்ள எண்ணெய் சிக்குநாற்றமும், வெளவால்களின் மல மூத்திரங்களின் நாற்றமும், எப்பொழுதும் கண்ணீரையூற்றுவதால் உண்டான வதியும் ஒரு சிறிது நோமும் உள்ளே தங்கவிடாமல் வெளியே வரச் செய்கின்றன. இங்ஙன மாய நிலையில் கடவுளைத் தரிசித்து அவரிடத்தில் மனத்தோடுகூடிய வந்தனை வழிபாடுகள் செய்வது முடியுமா? அன்றியும் அங்குள்ளகுளங்களின் நிலைமை சொல்லவும் முடியாத ஆபாசங்கள் நிறைந்திருக்கின்றன இதனைத்தான் திருக்குளமென்று கொண்டாடுவதுடன், இக் குளத்துத் தண்ணீரையே தீர்த்தமென்று செகல்வி அருந்துகிறார்கள். இதனால் நோய்கள் உண்டாவதற்கு தடையென்ன? இக் கோவில்களில் கடக்கும் திருவிழாக்களுக்குக் கணக்கேயில்லை. நினைத்ததற்கெல்லாம் திருவிழாத்தான். இவ்வாறு கடக்கும் திருவிழாக்களில் பார்ப்பனக் குருக்கள்களுக்கு ஊதியம் கிடைக்குமாகையால் எவ்விதக் காரணத்தாலும், வறுமை மிகுந்திருந்தாலும் திருவிழாக்களை கடத்தாமல்விடமாட்டார்கள்.

இத் திருவிழாக்களுக்குப் பல ஊர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் கூட்டங்கூட்டமாக வருவார்கள். நமது மக்களுக்குள்ள பேதமை காரணமாகத் தங்களிடம் நகைகள் இல்லாவிடினும் பிறரிடம் கடன் வாங்கிக்கொண்டாவது தங்களை கன்றாக அலங்கரித்துக்கொண்டுதான் செல்லுவார்கள். இவ்விதமான திருவிழாக்கள் கள்ளர்களுக்கும் திருவிழாவாகத் தானிருக்கும். அவர்கள் இதற்கென்றே தூரதேயத்திலிருந்தும் வருவதுண்டு. அன்னியரிடம் நகைகள் வாங்கித் தம்மையலங்

கரித்துக்கொண்டு வந்தவர்கள் இவ்விதமான திருடர்களுக்குத் தங்கள் கைகளைப் பறிகொடுத்தும் விடுவார்கள் அதோடு மட்டுமல்லாமல் இங்குள்ள அசுத்தங்களால் வியாதிகளையும் வாங்கிக்கொண்டு ஊர்செல்லுவார்கள். இதுதான் திருவிழாவிற்குச் செல்லுவதாலுண்டாகும் பயன்கள். இதனைக்கண்டுதான் அறிஞர்கள் கோவிலென்பது கள்ளக் கூடமென்றும், விபசாரிக்கூடமென்றும் கூறியிருக்கிறார்கள்.

கடவுள் பக்தியை ஊட்டுவதற்கு சிலை அவசியமென்றால் அச்சிலை தணித்த ஒரு இடத்தில் இருக்கவேண்டும். கோவில்கள் தேவையில்லை. எல்லாரும் சென்று கண்டுவழிபடலாம். இதற்காகத் தங்கச்சிலைகளும், கைகளும் ஆடைகளுமாகிய ஆடம்பாங்கள் வேண்டியதில்லை. கடவுளை நமக்கும் உயர்ந்ததான ஓர் பொருள் என்று கருதுவதனால் மக்களுக்குள்ள திருமணம், குடும்பச்சண்டை, தாசிவீடு செல்லல், தூது போதல் முதலிய செயல்களையெல்லாம் ஏற்றி, அதற்குத் திருவிழா என்றுபெயரிட்டு பெரும்பொருள்களை வீணாகச்செலவு செய்வது பொருந்துமா? இதனை நன்றாக எண்ணிப்பார்ப்போமானால் பகுத்தறிவில்லாத மக்களை ஏமாற்றிப்பணம் பறிக்கும் செய்கையே அன்றி வேறொன்றும் காணமுடியாது.

கோவிலுக்குச் சென்று கடவுளைத்தரிசிப்பதனாலும் பார்ப்பானுக்குப் பணங்கொடுத்தால்தான் முடியும். எங்கும் நிறைந்த கடவுளைத்தரிசிப்பதற்குக்கூட பார்ப்பானிடம்பணம் கொடுத்து அவன் உத்திரவு பெற்றுத்தான் ஆகவேண்டும். நாம் ஆராதனைக்கென்று கொண்டுபோகும் பழம் தேங்காய்கள் கூட பார்ப்பானிடம் கொடுத்தால் தான் கடவுள் ஏற்றுக் கொள்ளுவாராம். அவைகளை நாமே கொடுத்தால் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டாராம். சுங்கச்சாவடியைப்போல் சில கோயில்களில் நுழைவதற்கு வரியும் வசூலிக்கின்றார்கள். சாமிக்கு அபிடேகம் செய்வதென்று கொட்டும் பால், இளநீர், தயிர், தேன் முதலியவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து மிகவும் ஆபாசமாகவிருக்கும். அதனைத்தான் பக்தியுள்ள மக்கள் ஆவலுடன் வாங்கியருந்துகின்றார்கள். இதனால் உண்டாகும் நோய்கள் எண்ணிலடங்கா.

ஆகவே இத்தகைய தீமைகளுக்கு உறைவிடமாகிய கோவில் திருவிழாக்கள் ஆகியவைகளால் ஒரு சிலருக்குத் தற்காலசாந்தியாக வேலை கிடைக்கின்றதென்றாலும் எத்தனையோ

காந்தியும், ஜாதிப்பாகுபாடும்.

தோழர் அம்பத்கார் அவர்கள் இந்து மதத்தை விட்டுவிட வேண்டும் என்றுசொன்னவுடன், காந்தியார் உள்பட பல இந்துமத பிரசாரகர்களுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. ஆனால், ஜாதிவித்தியாசம் தீண்டாமை ஆகிய விஷயங்களில் காந்தியார் அபிப்பிராயத்தைப்பற்றி பிரபல சீர்திருத்தவாதியும், தேசியவாதியும், காங்கிரஸ்மகாநாட்டுக்குத்தலைமை வகித்த காங்கிரஸ் தலைவருமான சர். சி. சங்கர நாயர் சொல்லி இருப்பதைக்கவனித்துப்பாருங்கள். (அவர் சுயமரியாதைக்காரர் அல்ல)

"தோழர் காந்தியார் எல்லாப்பொது மக்களுக்கும் கல்வி புகட்டப்படவேண்டியதில்லையென்றும், அதிலும் ஆங்கிலக்கல்வி அறவே ஒழிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறார். என் அவர் அவ்வாறு கருதுகிறார் என்று பார்த்தால், கல்விகற்றுவிடுவதினால் பொதுமக்கள் தாங்கள இருந்துவரும் வாழ்வில் அதிருப்தியடைந்து விடுவார்கள் என்பதுஒன்றேயாகும். இன்னும் தெளிவாகச்சொல்ல வேண்டுமானால், அந்தந்தவகுப்பார் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தற்கால நிலைமையோடு

ஆயிரம் மக்களை வேலையில்லாது திண்டாடச்செய்வதும், எத்தனையோ மக்களை அறிவிழக்கச்செய்வதும், சோம்பேறிகளாக்குவதும், பகற்கொள்ளையடிக்கச் செய்வதுமாகிய காரியங்களுடன் பெருந்தொகையான பொருள்களும் வீணாக்கப்பட்டு வருகின்றனவென்பது கன்றாக விளங்குகின்றது.

இத்தகைய கோவில்களுக்குச் செலவிடும் தோழர்கள் அப்பொருளை மக்களுக்குப் பயன்படக்கூடிய வேறு கல்ல துறையிற்செலவழித்தால், எத்தனையோ மக்களுக்கு வேலை கிடைப்பதோடு, மக்களுக்கே பெருநன்மையுண்டாகும். தற்காலத்தில் மக்களுக்கு இன்றியமையாதனவாயிருப்பது கல்வியே. ஆகையால் பழய இருட்டுக்கோயில்களுக்கு வீணாகச் செலவழிக்காது, அறிவொளி உண்டாக்குதற்கு வேண்டிய கல்விச்சாலைகள் உண்டாக்கி, அதன்மூலம மக்களுக்கு நல்லறிவை உண்டாக்குவாரானால் இதனைவிடச் சிறந்த செய்கை வேறொன்றுமில்லை. இவ்வாறு மக்களுக்கு அறிவை வளர்ப்பவர்கள் உலகையே வளர்ப்பவர்கள் ஆவார்கள்.

———:0:———

திருப்தியடைந்திருக்க வேண்டும்—அதாவது அடிமை எப்பொழுதும் அடிமையாகவே இருக்கவேண்டும் என்பதாகும். அவர் அந்த முடிவிற்கு வந்ததற்குக்காரணம், தாம் வருணமுறைப்படி ஜாதி பாகுபாட்டை ஒப்புக்கொண்டதேயாகும்.

"மேலும் காந்தியார் 'வருணாச்சிரமம்—ஜாதிபாகுபாடு—என்பது மனித இயற்கைக்கே இயல்பானது என்றும், இந்துமதம் அவ்வியல்பான ஒரு குணத்தைசாஸ்திரீக முறைப்படி வகுத்திருக்கிறதுஎன்றும், இவ்வெண்ணம் மனிதனுக்குப் பிறப்பிலிருந்தே தோன்றக்கூடியதாகும் என்றும், எவனும் தான் நினைத்தமாத்திரத்தில் தனது வருணத்தை [ஜாதியை] மாற்றிக்கொள்ளவோ அல்லது, நிர்ணயத்துக்கொள்ளவோ முடியாது என்றும், ஆத்மா வளர்ச்சியைக்கருதும் ஒவ்வொருவனும் சமபந்திபோஜனத்தையும் கலப்புமணத்தையும் தடுக்க வேண்டும்' என்றும் கூறியிருக்கிறார்.

"பஞ்சமர்கள் என்றோ அல்லதுமற்றும் அதுபோன்ற பலபேர்கள் என்றோ அல்லது வேறு எந்த நாமத்தால் அழைக்கப்பட்ட மக்களானாலும் சரியே, அவர்கள் யாவரும் தனியாகப்பிரிக்கப்பட்டு, உயர்ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்களுக்கு ஊழியஞ்செய்து உழல்வதே அவர்களின் கடமை என்பதாக அவர் நினைக்கிறார் போலும்!

"அவர் எழுதினதிலிருந்து நாம் அறியக்கிடப்பதாவது, இந்தியசரித்தைப்பற்றிய அறிவு அவருக்குமிகக் குறைவு என்றோ அல்லது அவாது ஜீவியத்தின் முக்கிய பாகம் பிற நாடுகளில் வாழ்க்கையை நடத்தினவர் என்றோ அல்லது ஒரு வேளை இந்நாட்டில் ஜாதிப்பாகுபாட்டால் ஏற்பட்டு வரும் தீமைகளை தாம் அறியாமல் இருந்திருக்கவேண்டும் என்பதாகவோ அதுகாட்டுகிறது. அப்படி இல்லையானால் கீழே காணப்படுகிற விஷயங்களை அறிந்திருப்பார்.

1. "இந்தியாவை அந்தியர்—அதாவது மகமதியர், ஆங்கிலேயர் முதலானவர்கள் ஜயித்து ஆளுவதற்கு இந்நாட்டில் உள்ள ஜாதிப்பாகுபாடேகாரணமாகும். மேலும் அவர்கள் தங்களது ஆட்சியை செலுத்தி வருவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களே காரணமாகும். அவர்களது உதவிதான் மிகவும் ஆதரவை அளித்துவரக்கூடியதாகும்.

2. "இந்தியாவில் அதிகமானபேர் கிறிஸ்தவ மதத்திலும் மகமதிய மதத்திலும் மாறினதற்கு இந்தியாவிலுள்ள ஜாதிப்பிரிவினையேயாகும்.

3. "மனித வர்க்கத்தின் இழிவிற்கே இதுதான் பொறுப்பாகும். பழயகாலத்திலிருந்த அடிமையின் இழிவோ அல்லது தற்காலத்தில் உள்ள அடிமையின் இழிவோ அல்லது வேறு எதுவானாலும் இத்தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எள்ளளவும் சமமாகாது.

4. "இந்தியாவின் கண் உள்ள இந்துக்கள்—மகமதியர்கள் பிராமணர்கள்—பிராமணரல்லாதார்கள் என்று சொல்லக்கூடிய கட்சி பிரதிகட்சிகள் இருப்பதற்கும் இந்த ஜாதிப்பிரிவேகாரணமாகும்.

5. "சமூக முன்னேற்றத்திற்கோ அல்லது பொருளாதார முன்னேற்றத்திற்கோ அல்லது தேசிய முன்னேற்றத்திற்கோ ஆனாலும் சரியே இந்தஜாதிப் பிரச்சனைதான் பெரும் தடையாய் இருக்கிறது.

"ஆகவே ஏதோ அங்குமிங்குமுள்ள சில அற்பமான குறைகளைத் துடைத்து விட்டு, முக்கியமான, ஜாதிப்பிரிவினைக்கே அஸ்திவாரமான கோட்பாடுகளையெல்லாம் தோழர் காந்தியார் அவ்வாறே ஆதரித்து வருகிறார்.

"மெக்காலே பள்ளிக்கூடத்தில் 4-வது பாரம் படிக்கிற ஒரு பள்ளிப்பையன்கூட நம்பமுடியாத ஒரு பெரிய விசாரணையில் இறங்கியிருக்கிறார். அதாவது ஜாதிப்பாகுபாடுகளின் அவசியமும் அதனால் மக்களுக்கு ஏறபடும் நன்மையும் என்பதைக்குறித்த ஜாதிப்பாகுபாடு இருந்துவரவேண்டும் என்பதுபற்றியும் அதனால் லாபம் இருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க பெரியதொரு ஆராய்ச்சியில் இறங்கி இருக்கிறார்.

"இந்த ஜாதிப்பாகுபாடு சம்மந்தமான விஷயங்களால் எற்படக்கூடிய தீமைகளையும் குறைவுகளையும் பற்றிய ஞானம் அவருக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அது சம்மந்தமான ஆதாரங்களையும் அவர் பார்த்திருக்கவில்லை என்றுதான் தெரிகிறது.

"அன்றியும் அவர் ஜாதி பாகுபாட்டை ஆதரிப்பதானது உயர் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுடைய ஆதரவைதேடிக்கொள்வதற்காகவேயாகும். ஏன் அவர்களுடைய ஆதரவைத் தேடுகிறார் என்றால் அவர்கள்தான் அவருடையவேலைக்கு பணவுதவியளிக்கிறார்கள். அவர்கள் உதவாவிடில் அவருடைய திட்டமெல்லாம் பாழாய் போய்விடும்.

"அவருடைய கோஷ்டியார்களிலே ஒருவர் இந்நாட்டில் இருந்த கலைகளையும் சாஸ்திரங்களையும் இந்த ஜாதிப்பிரிவே அழித்துவிட்டது என்று கூறியிருக்கிறார். 'இந்தியாவானது ஒரு காலத்தில் எல்லா கலைகளுக்கும், (விஞ்ஞான) சயன்சுமுதலிய சாஸ்திரங்களுக்கும் பிறப்பிடமாயிருந்து புகழப்பெற்றும் வந்தது. அத்தகைய ஒரு நாடு இப்பொழுது தாழ்த்தப்பட்டு, சுதந்திரமற்று, அடிமையாக்கப்பட்டு இருப்பதற்கும், மக்கள சுதந்திரமற்று வாழ்வதற்கும் காரணமாய் இருந்து வருவது இந்தஜாதிப் பாகுபாடு ஒழிந்துபோகும் என்ற பயமேயாகும்' என, ஹிந்து ரசாயன சாஸ்திரத்தைப்பற்றிய சரித்திரம் எழுதிய ஸர். பி. சி. ரே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்நாட்டில் உயர்ந்த சர்க்கார் உத்தியோகத்திற்கு இன்றியமையாத கல்வி வேண்டாம் என்பதும், இந்தியர் கைத்தொழில் உற்பத்திக்கும் உலோக அபிவிருத்திக்கும் அவசியமான கல்வி தேவையில்லை என்பதும் தோழர் காந்தியாரின் அபிப்பிராயம்.

"இவ்வெண்ணத்திற் கேற்பதே காந்தியார் காசியில் உள்ள நேஷனல் ஹிந்து சர்வகலாசாலையையும் அலிகாரிலிருக்கும் மகமதிய சர்வகலாசாலையையும் ஒழிப்பதற்காக அரும்பாடுபட்டார். மேல்நாட்டுக் கல்வியையும் கீழ்நாட்டுக கல்வியையும் அக்கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வந்திருந்தது. காந்தியாருடையபெருமுயற்சி யாவும் இவ்விஷயத்தில் கல்லதிர்ஷ்ட வசமாக சித்தியளிக்காமல் போய்விட்டது.

"தோழர் காந்தியார் அவ்வாறு ஜாதிபாகுபாட்டை ஆதரித்ததால் உயர்ந்தஜாதியார்களின் ஆதரவும், ஹிந்துமதத்தின் மூன்னுக்குப் பின் மூரணான கொள்கைகளும் அவருக்குப் பக்கபலமாயிருக்கின்றன. அவரும் அவருடைய சகாக்களும், மகமதியர்களும், மகமதியரல்லாதார்கள் என்ற பிரச்சனையை பலப்படுத்தி அவ்விருவகுப்பாருக்குள்ளும் பெரிய பிளவுகளை உண்டுபண்ணியும் வருகிறார்கள். இதைதவிட மேலாக இந்தியர்கள், ஆங்கிலேயாகள் என்ற பிரச்சனையை உண்டாக்கி இவர்களுக்குள்ளும் தீராப்பகைகையையும், வெறுப்பையும், பயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

"ஆகவே சீர்திருத்தவாதிகள் எனப்படுபவர்கள் யாவரும் சிறப்பாகஇந்துப்பெண்கள் மகமதியப்பெண்கள் முதலானவர்களிடம் உள்ள குறைகளை நீக்கி அவர்களின் நிலையை உயர்த்தப்பாடுபடவேண்டும். அவர்களின் ஒத்துழைப்பும் முன்னேற்றமுமில்லாமல் இந்தியநாடானது ஒரு நாளும் நாகரீக தேசங்களோடு சமமாகப் பாவிக்க முடியாது என்பதாகும்.

"தோழர் காந்தியார் மற்றொருபுறம், மகமதியர்கள் கிணைத்துக்கொண்டிருக்கும் வீண் எண்ணம் எல்லாம் ஆசைகளுக்கு இடங்கொடுக்கக் கூடியதென்றும், இந்து மதத்தில் உள்ள குலாச்சாரம் நியாயமானதென்றும் நினைக்கிறார். தற்காலத்தில்உள்ள பெண்களின் நிலைக்குக் காரணமான ஜாதி அனுஷ்டானத்தையே நாம் ஆதரிக்கவேண்டும் என்றும் அதையே பின்பற்ற வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். ஒடுக்கக் கூடிய அல்லது அடக்கி ஆளக்கூடிய சட்டங்களை ஆதரித்தும் வருகிறார். இச்சட்டங்கள் தான் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறவிடாமல் அடிமைப்படுத்தி, அறிவற்று, சுயமரியாதையற்று இருக்கச்செய்திருக்கிறது. நம்முடைய எதிரிகள் நமக்குசுயஆட்சி நடத்தும் சக்தியில்லை என்று சந்தேகிக்கச்செய்வதோடுமட்டும் நின்று விடாமல், நமக்குச் சுய ஆட்சி (Home Rule) இந்தியாவிற்கு அளிப்பதை தாமதிக்கும்படியாகவும், அதற்கான நியாயங்களை அவர்கள் கூறுவதற்கான வசதிகளையும் தோழர் காந்தியார் ஏற்படுத்திவிட்டார். நான் முன்கூறியபடி, அவர் எல்லாத்துறைகளிலும் அதாவது சீர்திருத்தவாதிகள் முயல்கிற சகல மார்க்கங்களிலும், குல வித்தியாசத்தையும் வகுப்புவித்தியாசத்தையும் கிளர்ச்சி செய்துகொண்டும் தேசம் பிற்போக்கடையும்படியான காரியங்களைச் செய்துகொண்டும் வந்திருக்கிறார்."

———0———

மின்சார அலைகளும் அதனுபயோகங்களும்.

(தோழர் A. V. சுப்பிரமணியன் எழுதுவது)

நீரில் அலைகள் உண்டாகி அவைகள் அந் நீரிலேயே வெகுதூரம் செல்வதை நாம் பார்த்திருக்கிறோம். இது நாம் நிதர்சனமாய் கண்ணால் பார்க்கக்கூடியது.

இதைப் போல நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் ஏற்படக்கூடிய அநேக விதமான அலைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன அவைகள் நேராகவே கண்ணுக்குப புலப்படாவிட்டாலும் நீர் அலைகளை ஒத்த சில குணங்கள் அவைகளுக்கு இருப்பதால், அவைகளும் அலைகளாகத்தான் இருக்கவேண்டுமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

உதாரணமாக ஒலி, ஒளி முதலியன அலைகள் போல் தான் எங்கும் பரவுகிறதென்று ஊகிக்கிறார்கள். இவை இரண்டில் ஒளியானது, காற்றிலேயே அலைகள் போலப் பரவுகிறது. ஒளிக்குக் காரணமும் காற்றின் அசைவென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். காற்றில்லாத இடத்தில் ஒலி பரவுவதில்லையென்பதிலிருந்தும் காற்றின் மூலமாய்த்தான் ஒலி பரவுகிறதென்பது நன்றாக விளங்குகிறது.

இதேபோல் ஒளியும் எங்கும்பரவியிருக்கும் ஈதர்(Eather) அல்லது ஆகாயம் என்று சொல்லப்படும் ஒரு சூட்சுமமான வஸ்துவின் மூலம் பரவுகிறது. ஆகாயம் என்ற ஒரு வஸ்து இருக்கிறதென்று எவராலும் நிரூபிக்க முடியவில்லை. என்றாலும் சில ஆராய்ச்சிகளிலிருந்து ஆகாயம் என்ற வஸ்து இருக்கிறதென்றே ஊகிக்கவேண்டியிருக்கிறது. இந்த ஆகாயத்தில் ஏற்படும் சலனத்தில் வேகத்திற்குத் தகுந்தாற்போல் குணவேறுபாடுள்ள அநேக இயற்கை விநோதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒளியில் அனேக நிறங்கள் இருப்பதன் காரணம் ஆகாய சலனத்தின வேகவித்தியாசத்தால்தான். நமது கண்களுக்குப் புலனாகாத இன்னும் அநேக ஒளிகள் அல்லது சலனங்கள் ஆகாசத்தில் பரவிக்கொண்டிருக்கின்றன.

இந்தச் சலனங்கள் மனிதர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் அநேக உதவிகள் புரிந்துகொண்டிருக்கின்றன.

சூரிய ஒளிபோன்ற இயற்கை ஆகாச சலனங்கள் தவிர மனிதர்களால் தங்களுடைய உபயோகத்திற்காக, சில அலைகள் ஆகாயத்தில் உண்டாக்கப்படுகின்றன. அந்த அலைகள் மூலந்தான், ஒலி, ஒளி முதலியன இந்தக் காலத்தில் வெகு தூரத்திற்கு அனுப்பப்படுகின்றன. இவைகளுக்குத்தான ஆகாயத் தந்தி (Wireless Telegraphy) ஆகாய ஒலி பரப்பு (Radio Teliphony) ஆகாச ஒளி பரப்பு (Telvision) என்று சொல்லப்படுகிறது,

இப்படி ஒலி, ஒளி முதலியவைகளை வெகுதூரம் அனுப்புவதற்கு உபயோகிக்கப்படுவது மின்சார அலைகள்தான். இந்த மின்சார அலைகளினால் ஆகாய அலைகளை உற்பத்திசெய்ய எதுவாகிறது. ஆகையினால், ஒலி, ஒளி, முதலியன ஆகாயத்தின் மூலம் அனுப்புவதற்கு மின்சார அலைகளே முதலில் உண்டாக்கப்படுகினறன, இந்த மின்சார அலைகள் எந்தெந்த விதத்தில் உபயோகமாகிறது என்று கொஞ்சம் ஆராய்வோம்.

ஆகாய ஒலிபரப்பு.

ஆகாய ஒலிபரப்பென்பது அனேகமாய் எல்லோரும் கேட்டிருக்கக்கூடிய விஷயம. இப்போது ரேடியோ, கம்பியில்லாத் தந்தி என்று சொல்லப்படுகிறது இதுதான். இந்த ஆகாய ஒலிபரப்புக்கு மூலகாரணமாய் உள்ளது மின்சார அலைகள். இந்த மின்சார அலைகளை சில கருவிகளினால் முதலில உற்பத்தி செய்கிறார்கள். இந்த அலைகளை மிக உயரக் கட்டி இருக்கக்கூடிய எரியல் எனகின்ற ஒரு கம்பியில் செலுத்துவதினால் அதன்மூலம் ஆகாயத்தில் சலனம் ஏற்படுகிறது, இதுதான் (Carrier Wave) காமயர் அலைகள் அல்லது ஒலியைத் தாங்கிச் செல்லுக அலைகள் என்று சொல்லப்படுகிறது. இந்த அலைகளை முதலில் உற்பத்தி செய்தபிறகு இதனுமூலம் எந்தச் செய்தி வேண்டுமென்றாலும் அனுப்பலாம்.

மின்சார அலைகளை நம்முடைய ஒலிக்கேற்றவாறு மாறுதல் செய்தால் அதை ஒத்து ஆகாய அலைகளும் மாறுதல் அடைகின்றன. ஆகையினால் நாம் அனுப்பவேண்டிய செய்

திக்கேற்றவாறு ஆகாச நிலைகள் மாறுபட்டு வெகு தூரம் பாவுகிறது. அப்படிப்பாவும் அலைகளை ஆகர்ஷணக்கருவியைக்கொண்டு கிரஹித்தால் அனுப்பப்படும் செய்தியை அறியலாம்.

ஆகாய ஒளிபரப்பு.

ஆகாய ஒளிபரப்பைப்போல் கொஞ்சகாலமாக ஒலியையும் (படங்கள் உருவங்கள் முதலியன) பரப்புவதற்காக ஆராய்ச்சிகள் செய்து ஒருவாறு ஸித்தியும் அடைந்திருக்கிறார்கள். இப்போது ஜெர்மனி, இங்கிலந்து முதலிய இடங்களில் ஒலி பரப்புவதைப்போல் படங்கள் உருவங்கள் முதலியவைகளையும் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இதைப்போல் ஒலி பரப்புவதற்கும் மூலகாரணமாய் உள்ளது மின்சார அலைகளே. ஒளிபரப்பைப்போலவே மின்சார அலைகளின் மூலம் (Carrier Wave) காரியர் அலைகளை உற்பத்தி செய்கிறார்கள். பிறகு அனுப்பவேண்டிய படத்தையோ உருவத்தையோ அனேக சிறு பாகங்களாகப் பிரித்துக்கொண்டு அதன் நிறத்திற்கு அல்லது ஒளிக்குத் தகுந்தாற்போல் மின்சார அலைகளை மாற்றுகிறார்கள். இதனால் ஆகாயத்தில் பரவும் காரியர் அலைகள் உருவத்திற்கேற்றவாறு மாற்றப்படுகிறது. ஆகையினால் எவரெவர் இந்த அலைகளை கிரஹிக்கும் ஆகர்ஷணக்கருவிகளை வைத்திருக்கிறார்களோ அவர்களால் இந்தப்படத்தையோ உருவத்தையோ பார்க்கமுடிகிறது. இதைத்தான் டெலிவிஷன் (Television) என்று சொல்லப்படுகிறது. இவைகளைத்தவிர டெலிபோன் (Telephone) ஒலிப்படம் (Talkies) ஒலியை வலுப்படுத்தி பலர் கேட்கும்படி செய்தல் (Public address systems) கிராம போன் தட்டுகள் (Grama-phone plates) செய்தல் முதலிய விஷயங்களில் இந்த மின்சார சலனங்கள் உபயோகமாகின்றன.

"தமிழன்"

இந்தத்துரதிஷ்ட நாட்டிலே எல்லாச் சமுதாய ஊழல்களுக்கும் மதம் ஆதாரவளிக்கின்றது.

டாக்டர், முத்துலட்சுமி அம்மாள்.

விதண்டாவாதம்.

(குறும்புச் சந்தேகம்)

மதத்துக்கு அரசாங்கம் பாதுகாப்பாயிருக்கிறதா? அல்லது அரசாங்கத்துக்கு மதம் பாதுகாப்பாயிருக்கிறதா?

ஃஃ ஃஃ ஃஃ

கடவுளுக்கு பணக்காரன் பாதுகாப்பா? அல்லது பணக்காரனுக்கு கடவுள் பாதுகாப்பாயிருக்கிறதா?

ஃஃ ஃஃ ஃஃ

மதத்தைப் பணக்காரன் காக்கின்றானா அல்லது பணக்காரனை மதம் காக்கின்றதா?

ஃஃ ஃஃ ஃஃ

கடவுள் இல்லாமல் பணக்காரன் வாழமுடியுமா? அல்லது பணக்காரன் இல்லாமல் கடவுள் வாழ முடியுமா?

ஃஃ ஃஃ ஃஃ

பார்ப்பானை கடவுள் உண்டாக்கினாரா? அல்லது கடவுளை பார்ப்பான் உண்டாக்கினானா?

ஃஃ ஃஃ ஃஃ

கடவுள் இல்லாமல் மனிதன் வாழ முடியாதா? அல்லது மனிதன் இல்லாமல் கடவுள் வாழமுடியாதா?

ஃஃ ஃஃ ஃஃ

மனிதனுக்காக மதம் இருக்கிறதா? அல்லது மதத்துக்காக மனிதன் இருக்கிறானா?

ஃஃ ஃஃ ஃஃ

மதம் மக்களை மாற்றிக்கொள்ளுகிறதா? அல்லது மக்கள் மதத்தை மாற்றிக்கொள்ளுகிறார்களா?

ஃஃ ஃஃ ஃஃ

மனிதனுக்கு மதம் "ஜாதியைப் போல்" பிணியில் ஏற்

பட்டதா? அல்லது மனிதன் பிறந்தபின் மதம் வந்து புகுந்து கொள்ளுகிறதா?

∴ ∴ ∴

இப்பொழுது,

காந்தியார் மனிதனுக்கு மதம் பிறப்போடு வருகிறது என்கிறார். அன்றியும் அது சட்டையைக் கழட்டுவதுபோல் கழட்டக்கூடியது அல்ல என்கிறார்.

அப்படியானால்,

மதமற்ற நாஸ்திகனுக்குப் பிறக்கிற குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

∴ ∴ ∴

தகப்பன் கிறிஸ்தவனாகவும், தாய் இந்துவாகவும் இருந்தால் இவர்களது குழந்தை எந்த மதத்தோடு பிறக்கிறது?

∴ ∴ ∴

எல்லாமதக்காரர்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் தேவதாசிகளின் குழந்தைகளுக்கு எந்தமதம் பிறவி மதம்?

∴ ∴ ∴

இந்து பிரசிடெண்ட்டுகளுக்கும் கிறிஸ்துவ உபாத்தினிகளுக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கு எந்த மதம் பிறவி மதம்.

∴ ∴ ∴

முஸ்லீம் சேர்மென்களுக்கும் இந்து உபாத்தினிகளுக்கும் பிறக்கும் குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

∴ ∴ ∴

ஐரோப்பிய ஆபீசர்களுக்கும், இந்திய உத்தியோகஸ்தர் பெண்களுக்கும் பிறக்கும் குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

∴ ∴ ∴

முதலில் ஒரு இந்துவையும், பிறகு ஒரு முஸ்லீமையும்

மணந்துகொண்ட கிறிஸ்துவ பெண்ணுக்கு பிறந்த குழந்தைகள் எந்த மதத்தோடு பிறக்கின்றன ?

ஆரிய சமாஜிகளால் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் முதலியவர்களிலிருந்து மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களும், கிறிஸ்தவர்களால் இந்துக்களில் இருந்து மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களும், முஸ்லீம்களால் இந்துக்களிலும், கிறிஸ்தவர்களிலும் இருந்து மத மாற்றம் செய்யப்பட்டவர்களும் எந்த மதத்தோடு பிறந்தவர்களாகிறார்கள்.

அது எப்படி கண்டுபிடிக்கமுடியும் ?

இந்தப்படி மதம் மாறியவர்களும், மதம் மாற்றப்பட்டவர்களும் செத்தால் மதம் மாறியதற்காக நரக மோக்ஷமடைவார்களா?

எந்த மத சம்பந்தமான மோக்ஷ நரகங்களை அடைவார்களா ?

இன்று இந்தியாவில் உள்ள 8-கோடி முஸ்லீம்களும் ஒரு கோடி கிறிஸ்தவர்களும் ஆதாம் ஏவாள் காலம் தொட்டே முஸ்லீமாகவும், கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறார்களா? அல்லது சட்டையைக் கழட்டிவைத்துபோல், பழய மதங்களைக்கழட்டிவிட்டு, வேறு மதத்தை மாட்டிக்கொண்டவர்களா?

மதங்களுக்கு இருக்கும் சட்டம்தான் ஜாதிப்பிரிவுகளுக்கும், வருணச்சிரம தர்மங்களுக்கும் இருந்து வருகிறதா அல்லது இவைகளுக்கு வேறு சட்டமா?

ராமானுஜர் காலத்தில் வைணவர்களாக ஆக்கப்பட்ட, ஆசாரிகள், மண் உடையார்கள், நாடார்கள், தேவாங்கர்கள், பல ''தாழ்ந்த'' வகுப்பார்கள் எல்லோரையும் அவர்கள் சந்ததியார்களையும் இன்று எப்படி மதிக்கிறது?

கீதைப்படியும், மனுதர்ம சாஸ்திரப்படியும் சூத்திர ஆணுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்த குழந்தை எந்த வருணத்தைச் சேர்ந்தது ?

வைதிகப்பார்ப்பானும், தேசியப்பார்ப்பானும்

13.10.35ந்தேதி விருதுநகர் ஜஸ்டிஸ் தொண்டர்கள்
மகாநாட்டில் திண்டுக்கல் தோழர் M. R. மந்திரன் பாடியது.

(அற்புதப்புதுமையென்ற பாட்டு வண்ணம்)

1 கடவுள் ஆத்மாமோட்சம் என்பான் வைதிகப்பார்ப்பான்—திலகர்
காந்தி மகாத்மா ஜேஜே யென்பான் தேசியப்பார்ப்பான்

2 வடமொழியொன்றே மந்திரமென்பான் வைதிகப்பார்ப்பான்—பாரத
வந்தேமாதர மென்றே சொல்வான் தேசியப்பார்ப்பான்

3 சுவர்க்கப்பதவி கிடைக்குமென்பான் வைதிகப்பார்ப்பான்—பூரண
சுயாராஜ்யம் கிடைக்குமென்பான் தேசியப்பார்ப்பான்

4 திவசம் பூஜைதிருநாளென்பான் வைதிகப்பார்ப்பான்—நமது
திலகர் காந்தி ஜெயந்தியென்பான் தேசியப்பார்ப்பான்

5 நாமம் போட்டால் க்ஷேமமென்பான் வைதிகப்பார்ப்பான்—தக்ஷி
ராட்டினமேபசி யோட்டிடுமென்பான் தேசியப்பார்ப்பான்

6 சாம்பல் சாமி சின்னமென்பான் வைதிகப்பார்ப்பான்—மூரட்டுச்
சாக்குக்கதரே காந்தியமென்பான் தேசியப்பார்ப்பான்

7 கோவில்மணியம் குருக்களென்பான் வைதிகப்பார்ப்பான்—போலீஸ்
குண்டாந்தடியடி பட்டேனென்பான் தேசியப்பார்ப்பான்

8 பாவியென்பான் லோபியென்பான் வைதிகப்பார்ப்பான்—நம்மை
பதவிவேட்டைக் காரனென்பான் தேசியப்பார்ப்பான்

9 நாத்திகனென்பான் சூத்திரனென்பான் வைதிகப்பார்ப்பான்—நம்மை
நாட்டைக்காட்டிக் கொடுப்போனென்பான் தேசியப்பார்ப்பான்

10 தீர்த்தம் கோவில் மூர்த்தியென்பான் வைதிகப்பார்ப்பான்—நமது
தேசப்பாரத தேவியென்பான் தேசியப்பார்ப்பான்

11 சிர்ப்புரைமுனிவர்கள்செப்பினதென்பான்வைதிகப்பார்ப்பான்-ஜவஹர்
நேரு காந்தி சொன்னதென்பான் தேசியப்பார்ப்பான்

12 அர்ச்சனை உண்டியல் தட்சணையென்பான் வைதிகப்பார்ப்பான்-ஜயா
அரிஜனப்பண்டு கதர்நிதியென்பான் தேசியப்பார்ப்பான்

13 திமிர்பெறு மனுநூல் கீதைபடிப்பான் வைதிகப்பார்ப்பான்—மித்திரன்
தினமணி இந்துசங்கு படிப்பான் தேசியப்பார்ப்பான்

14 சமணத்துரோகி சம்பந்த மூர்த்தி-வைதிகப்பார்ப்பான்—நமது
ஜஸ்டின் எதிரி சத்தியமூர்த்தி தேசியப்பார்ப்பான்

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதிய நூல்.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ	0 5 0
பிரசுரதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த கண்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமூகவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0

அறிஞர் பிரம்சாரி M A., L. T, எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L, எழுதியவை

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I-ம் பாகம்		0 6 0
ஷை	II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியது.

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம			0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”) ...		,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ...		..	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. மி.)			0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

)o(

1.	இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	கைவல்யம் அல்லது கரிக்கியானம்	0	8	0
	(இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது)			
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம்	0	8	0
8	ஞானசூரியன் ...	0	5	0
9.	தர்ம பரீக்ஷையல்லது புராண ஆபாசம்	0	3	0
10.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
11.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
12.	ஈ.வெ.ரா. சிறுத்தமகாகட்டு உபன்யாசம்	0	2	0
13.	அகத்தியர் ஆராய்ச்சி ...	0	2	0
14.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
15.	சுயமரியாதைப்பாடல் ...	0	2	0
16.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) ...	0	2	0
17.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
18.	பார்ஸ்ட்வதா உபன்யாசம்	0	1	0
19.	சோஷியலிசம்	0	2	0
20.	போல்ஷ்விக் முறை	0	1	0
21.	ஈ. வெ. ரா. இலங்கை உபன்யாசம்	0	0	9
22.	கதர்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
23.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
24.	சோதிடப்புரட்டு	0	2	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.